65

தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 5	சென்னை	4-10-58	சனிக்கிழமை	இதழ் 16

OFFICE OF THE ... OF BOOKS 6 - OCT 1958 MADRAS
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 198387 சென்னை-600 008

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

சிவகெங்கைச் சீமையில் வீரத்தேவன்

—உள்ளே

வாழ்க எமது வளமார் திராவிடம்

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டு விடுதலைப் பிரச்னையிலே தன்னுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி மாற்றார் மருட்சியடையும் மாபெரும் மாறுதலை வளர்த்துக் காட்டியிருக்கிறது. தென்னாட்டின் நான்கு இன மக்களும் மொழி வழி பிரிந்து இன வழி இணைந்து-'கூட்டரசு' அமைத்துக் கொள்ள வேண்டும். வடநாட்டுப் பிணைப்பையும் அரசியல் இணைப்பையும் அறுத்திட வேண்டும் என்ற பேருண்மையை புரியாத நெஞ்சங்கள் எல்லாம் தெரிந்துகொள்ளும் பணியினை கழகம் மேற்கொண்டு பலன் பெற்றுத் திகழ்கிறது. திராவிடப் பிரிவினைக் கொள்கை மக்களின் இதயத்திலும் எண்ணத்திலும் செயலிலும் வலிவும் பொலிவும் பெற்று அதனுடைய வெற்றிக்காகத் தங்களைப் பலியிடவும் தயங்காமல் பழிகளைத் தாங்கிக்கொண்ட பல்லாயிரக்கணக்கான தோழர்களை-அவர்களது வீரத்தின் எழில் சொட்டும் வரலாற்றினை இந்தியத் துணைக் கண்டம் சந்தித்துவிட்டது! பத்தாண்டுகளுக்கு முன்னால் ஏளனத்துக்குரிய கட்சியாகக் கருதப்பட்ட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு விடுதலை முரசொலிக்கும் பாசறை-வஞ்சகத்தின் உறைவிடமாய்த் திகழும் வடநாட்டு ஆதிக்க வெறியர்களின் ஆசைகளுக்கெதிராக திராவிட மக்களின் வளத்துக்காக வாதாடும் வழக்கு மன்றம்! கழகம் கேட்ட நலன்களை கடந்த காலத்திலே வேறு எந்த இயக்கமும் மக்களின் கண்ணுக்குக்காட்டவில்லை! இந்தத் தாயகம் இழந்த இன்பங்களை மீண்டும் பெற்றாக வேண்டும் என்ற அவசியத்தை முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் அறிவித்தது! பலப்பல நாட்களாக் தேசீய மயக்கத்திலேயிருந்த மக்களுக்குத் தங்கள் சொந்தத் திருநாட்டையும்-அந்தத் திருவிடத்தின் வளங்களையும், அந்த வளங்கள் எங்கிருந்தோ வந்தோருக்கெல்லாம் வளமூட்டுவதையும் உயிரோவியமாகத் தீட்டிக் காட்டிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிக மிக உண்டு! திராவிடப்பெருங்குடியின் பண்பையும்-பெரு நிலத்தின் வளப்பத்தையும் இலக்கியம் சொன்ன இன்பக் கதைகளையும் - வரலாறு காட்டிய வனப்புள்ள நிகழ்ச்சிகளையும் தென்னாட்டுஅரசியல்மேடைக்கு அழைத்து வந்த முதல் தலைவர் அறிஞர் அண்ணாதான்! வெள்ளையனைக் காட்டி மட்டுமே சுதந்தரச் சங்கொலித்தவர்கள் திராவிட மக்களின் கரங்களிலே அடிமைச் சங்கிலிகளைப்பூட்டிவிட்டார்கள். அந்தத் தளை அறுக்கச் சிங்கத் தமிழனே-பொங்கியெழு. இங்குன் நாட்டுக்கு இழி கழுதை ஆட்சியா- திருப்பு முகம் - திறவிழி கையிருப்பைக் காட்டு - என்று விடுதலைப் பண் பாடியவர் நாவலர் நெடுஞ்செழியன்தான்!

திராவிட முன்னேற்றக் கழகம் தன்மான உணர்வூட்டிய அறிவியக்கத்தின் முழு உருவம் என்றால் சாலப் பொருந்தும் - அரசியல் நெறி வளர்த்த விடுதலை இயக்கம்-திராவிடப் பிரிவினைக்குப் பல உயிர்களை விலையாகத் தந்துவிட்ட இயக்கம் என்பதும் உண்மையே! 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய ஒலி கேட்டவுடன் எல்லா மாற்றுக் கட்சிக்காரர்களும் எங்கேயிருக்கிறது திராவிட நாடு என்ற கேள்வியைத் தூக்கியெறிந்தார்கள். நாம் துவண்டுவிடுவோம் என்ற எண்ணத்துடன்! இலக்கியச் சான்றுகளைச் சொன்னோம். வரலாற்று உண்மைகளைக் காட்டினோம்! 'ஆரியராவது -- திராவிடராவது' என்று ஆணவம் பேசிய நாமக்கல் ராமலிங்கர்களையும் நாம் சந்தித்தோம்- வங்கத்தின் செங்கதிரோன்-தங்கம் நிகர் கவிதைகளைத் தந்த தாகூர் அவர்களை அழைத்து வந்து அவர் முன் நிற்க வைத்துப் பாடச் செய்தோம்! எதிர்க் கூடாரத்திலேயிருந்து திகைத்துப் போனவர்கள்-கழகம் தன்னுடைய இலட்சியத்தை மேன்மேலும்உறுதியோடு பேசுவதைக் கண்டார்கள்- கண்டபின் கேட்டார்கள். "திராவிட நாடு கிடைக்குமா" என்று. இல்லையென்று மறுத்துக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று கிடைக்குமா என்றோர் நாள் கேட்ட பிறகுதான் விடுதலை இயக்கத்திலே இருப்பவர்களும் இன்பத் திருவிடத்தை இருட்டிலே வைத்துள்ள பலரைப்பற்றித் தெரிந்துகொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு தோறும் விழா நடத்தி - விடுதலை முழக்கமிட்டு-"திராவிடம் பிரிந்தே ஆகவேண்டும்" என்று சூளுரைத்தது! சூழ்ச்சி யெண்ணங்கொண்ட சுதந்தர வீரர்கள் - திராவிட நாடு இல்லையென்று சொல்லி - கிடைக்குமா என்று சந்தேகப்பட்டவர்கள்-"திராவிட நாட்டைக் கொடுக்க மாட்டோம். - பிரிவினையை ஏற்றுக் கொள்ளமாட்டோம் - ஏக இந்தியா வைத் துண்டாடுவதா - இன்னொரு பாகிஸ்தானா, முடியவே முடியாது" என்று தங்கள் பலங்கொண்ட மட்டும் உரக்கப் பேசினார்கள்! இன வேறுபாடு - இயக்க - கட்சி வேறுபாடின்றி-அகில இந்தியர்கள் - இந்தியத் தமிழர்கள் - பெரிய கட்சிகள்-சிறிய கட்சிகள் - எல்லாம் ஒன்று பட்டு இந்தப் பிரிவினை உணர்ச்சியை அழித்துவிட அரும்பணியாற்றினார்கள். அவர்களுடைய ஆற்றலின் பலன்-திராவிட முன்னேற்றக் கழகம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற தன்னுடைய மூல முழக்கத்துடன் - பத்தாம் ஆண்டுப் பயணத்திலே படை நடத்திச் செல்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளை எல்லாக் கட்சியினரும் எதிர்க்கிறார்கள்- அவர்களிலே காரணம் எதுவுமின்றிக் குறை கூறுபவர்கள் உண்டு- பிரிவினை அவசியம் என்று உணர்ந்தாலும் ஏக இந்தியப் பித்த மயக்கம் மறுக்கச் சொல்கிறது- பிரிவினையை ஒப்புக்கொண்டால் - நம்முடைய கட்சிக்கு வேலையில்லையே என்று சஞ்சலப்படுவர்களும் இருக்கிறார்கள்! முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கவேண்டுமென்பதற்காகவே "பிரிவினை உயிர்-திராவிட நாடு பெறுவோம்- இல்லையேல் இடுகாடு செல்வோம்" என்று மார் தட்டியவர்கள்கூட இருந்தனர். அவர்களும் இப்போது தேவையில்லை என்கின்றனர்! திராவிட நாட்டு விடுதலை, வடநாடு, தென்னாடு என்று பேசப்படுவது இப்படி இரண்டு நாடுகள் இருப்பதைத் தான் உறுதிப்படுத்துகின்றன. இந்திய உபகண்டம் ஒரே நாடு ஒரே மக்கள்-எல்லோரும் பாரத வீரர்கள் என்று பேசப்படும்போது விந்தியத்துக்கு மேலே வளம் வளருவானேன். தெற்கே திராவிட நாட்டில் வறுமை வளரும் வகையில் வஞ்சகம் ஏன்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கேள்விக்கு மாற்றுக் கட்சிகளின் பதில்- "திராவிட நாட்டை நாங்கள் ஒப்புக் கொள்ளமாட்டோம்!" பஞ்சாபியர்கள் வசிக்கும் பகுதியை பஞ்சாப் என்று ஒப்புக்கொள்கிறார்கள். வங்காளியர் வாழும் பகுதியை வங்காளம் அல்லது வங்கமென்றும், குஜராத்திகள் வாழும் பகுதியை கூர்ஜரம் என்றும், மராட்டியர்கள் வாழும் பகுதியை மராட்டியம் என்றும், ஓரியர்கள் வாழும் பகுதியை ஓரிசா என்றும், ஒப்புக் கொள்பவர்கள் திராவிடர்கள் வாழும் பகுதியை திராவிடம் என்று ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்? மறுப்பது ஏன்? மனமில்லையா-மதியிலே குழப்பமா? பஞ்சாபியர்கள்வாழ்வதாலே அந்தப் பகுதியை பஞ்சாப் என்று அழைத்தாலும் சரி-அல்லது அந்தப் பகுதியிலே வாழ்வதாலே அவர்களைப் பஞ்சாபியர்கள் என்று அழைத்தாலும் சரி-வங்காளிகள் வாழ்வதாலே அந்தப் பகுதியை வங்கமென்று அழைத்தாலும் சரி-அல்லது அந்தப் பகுதியிலே வாழ்வதாலே அவர்களை வங்காளிகள் என்று அழைத்தாலும் சரி, குஜராத்திகள் வாழ்வதாலே அந்தப் பகுதியை கூர்ஜரம் என்று அழைத்தாலும் சரி அல்லது அந்தப்பகுதியிலே அவர்கள் வாழ்வதாலே அவர்களை குஜராத்திகள் என்று அழைத்தாலும் சரி, திராவிட இன மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியை திராவிடம் என்றும் இங்கே வாழ்வதாலே அவர்களை திராவிடர்கள் என்றும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்? ஏற்றுக்கொள்ளத் தயங்குவது ஏன்? எந்தவரலாற்றுச் சான்றுகளைக் காட்டி இன்றுவரையில் மறுத்துவிட்டார்கள்? அரசியல் நெறி மறந்த அதிகார மமதைக்கு வரலாறு பலியாவதா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தத் தெளிவான வினாவுக்கு விடைதரும் விருப்பம் மறுப்பவர் எவரிடத்திலும் இல்லை. இருப்பின் இனிமேலும் அதனை வரவேற்கத் தயங்கப்போவதில்லை. திராவிடநாட்டுப் பிரிவினை வேண்டுமென்றால் - திராவிட நாட்டின் எல்லை எது? இந்தக் கேள்வியை எதிர்க்கும் கட்சிகளிலேயிருக்கும் எல்லா வகையான தலைவர்களும்-அதாவது அகில இந்தியத் தலைவர்களும் - தமிழ்நாட்டில் மட்டுமே மதிக்கப்படுகிற தலைவர்களும் - கேட்கிறார்கள்! முதல் பிரிவிற்கு உதாரணம் நேரு-டாங்கே - இரண்டாவது ரகத்திற்கு காமராசர் - மா. பொ. சி. - ஜீவானந்தம் வகை! பண்டைப் புகழ்படைத்த ஒரு நாட்டின் விடுதலைப் பிரச்னை அதன் எல்லைகளுக்குள்ளே அடங்கவில்லை. திராவிட நாட்டிலுள்ள மக்களுக்கு இன்றுள்ள அடிமை வாழ்வு மாறி புதுவாழ்வு மலருமா என்ற இலட்சியத்தையே ஏற்றுக்கொள்ளாதவர்கள்-எல்லைப் பாகுபாடு உடனடியாக முடிவுகட்டக் கூடியதல்ல என்பதை மறந்துவிடுகிறார்கள். 'திராவிடநாடு' என்றவுடன் எல்லைகளைக் கேட்கின்றவர்கள் வெள்ளையரிடமிருந்து இந்தியாவை விடுவிக்க முயன்ற காங்கிரஸ் எந்த எல்லைக்கோடுகளைக் காட்டிற்று என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்! அப்போதைய தீர்மானப்படி இலங்கை, பர்மாகூட இந்தியாவில் தான் இருந்தன. 1935 க்கு பிறகு இந்த நாடுகள் பிரிந்த பின்பு எஞ்சிய பாகம்தான் இந்தியா என்று குறிப்பிட்டுக் கேட்கப்பட்டது. நிரந்தரமான எல்லைகள் எப்போதும் எவராலும் சொல்லப்படவில்லை! பாகிஸ்தான் கேட்ட மாவீரன் ஜின்னாவும் தான் கேட்கும் தனி நாட்டுக்கு இதுதான் வரையறுக்கப்பட்ட எல்லை என்று சொன்னதே கிடையாது. வடமேற்கு எல்லை மாநிலங்களை மட்டும் பாகிஸ்தான் என்று சொன்னார் துவக்கத்தில்! பின்பு முஸ்லிம்கள் வாழும் இடங்கள் எல்லாம் பாகிஸ்தானில் சேரவேண்டும் என்றார். மேலும் சில காலத்தில் மேற்கு பஞ்சாபும், கிழக்கு வங்காளமும் பாகிஸ்தான் தனி அரசில் இருக்கவேண்டும் என்று முஸ்லிம் லீக் வாயிலாக ஜின்னா கேட்டார்! அத்தோடு நிற்கவில்லை. மீண்டும் ஒரு திருத்தமாக மேற்கு பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான்வரை இரண்டையும் இணைக்கும் வகையில் இரண்டாயிரம் மைல் நீளத்தில் ஒரு பாதை அமைக்கப்படும் பகுதியும் பாகிஸ்தானில் சேரவேண்டும் என்பதாகத் தெரிவித்தார்கள். இறுதியில் எல்லா முடிவுகளும் மாற்றப்பட்டு இரண்டு துண்டுகளாக பாகிஸ்தான் தனியரசு அமைக்கப்பட்டது - ஆண்டு பலவாக எதிர்த்தவர்களும் தங்கள் வாழ்த்துரையை வழங்கினர்! உலகில் எங்கெங்கோ நடைபெற்ற எல்லா நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிகளிலும் எல்லைக் கோடுகள் துவக்கத்திலேயே முடிவு கட்டப்படுவதல்ல! தனித்தனி நாடுகள் தனித்தனி அரசுகள் அமைக்கப்பட்ட பின்பும்கூட எல்லைப் பிரச்னைகள் தொடரக்கூடிய ஒன்றாகும். நாடுகள் பிரிக்கப்பட்ட பின்பும்



— 11ம் பக்கம் —

“போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !”

எண்ணம்

மலர் 5 ‖ 4—10—58 ‖ இதழ் 16

பதறுகின்ற பண்டாவே, கேள் !

“ஈழத்துத் தமிழர்க்கோர் சொந்த ஆட்சி
இல்லாத தாலேதான் தொல்லை கண்டீர் !
வாழத்தான் பொறுப்பாட்சி அவர்கள் கேட்டார் !
வகை செய்தல் முறையாகும்! இந்தஒன்றே
ஈழத்துத் தொல்லைகளைத் தீர்த்து வைக்கும் !”
எனச் சொன்னார் ஆச்சாரி யார்இதைக்கண்(டு)
‘ஆபத்’தென் றரற்றுகிறார், இலங்கை நாட்டில்,
அநியாயக் கொடிபோட்டே ஆளும் பண்டா !

பன்னூறு காலத்தின் முன்னர் சென்றார்
பருக்கைக்கல் தனைவெட்டி நாடு கண்டார் !
முன்னோரின் வரலாற்றை ஈழ நாட்டின்
முறையாக்கி வாழ்வுக்கும் வழிவ குத்தார் !
அந்நாட்டின் மொழிஅன்று கலப்புச் சோறு !
அரிதாகும் பண்பாடு ! இவற்றை ஆய்ந்தார் !
தென்னாட்டின் சீரேபோல் இலங்கை நாடும்
சீராக உழைத்தார்காண் தமிழர் மக்கள் !

ஒன்றே சொல் ! அந்நாளில் சிங்களத்தார்
உல்லாச வளங்காணத் தமிழர் செய்தார் !
இன்றங்கே தமிழர்தம் உடமை யோடும்
இயல்பான கற்புக்கும் பங்கம் நேரல்
நன்றாமோ ? பொறுப்பாட்சி இல்லை யென்றால்
நாய்வாழ்வே தமிழ்வாழ்வாய் முடிந்து போகும் !
கொன்றாலும் கலங்காதீர் ! தமிழ ரே !நம்
குடிக்கங்கே நிலம்உண்டு ! மொழியும் உண்டு !

வடபாதி ஈழத்தில் தமிழர் ஆட்சி !
வடிவான தமிழாலே அரசின் ஆக்கம் !
தடைமீறி மடைபோலத் தமிழர் வெள்ளம்
தன்னாடாம் ஈழத்தைப் பொன்னா டாக்கும் !
விடை வேண்டும், ஆச்சாரி யார்கொடுத்த
வினாவுக்கு ! ஆம் !எங்கள் தமிழர் வாழ்க்கை
கெடவென்று பணிப்போரே ! செவி திறப்பீர்
கேட்பீர் ! தாய்த் தமிழ்மக்கள் அருகேஉள்ளோம் !

— கண்ணதாசன் —

மறைந்த தலைவர்

பி. பாலசுப்பிரமணியம்

குடும்ப நிதிக் குழு அமைப்பு

23-9-58 மாலை, சென்னை—புரசை, வேளாளர் தெரு, 100-எண் இல்லத்தில், தமிழவேள் பி. டி. இராசன் எம். எல். சி. அவர்கள் தலைமையில், திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் குடும்ப நிதிக்குழு அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், திரு. பி. பா. அவர்களிடம் மதிப்புடைய நண்பர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

மறைந்த தலைவர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய அருந்தொண்டை எண்ணி இக்குழு அவரது நினைவைப் போற்றுவதுடன், அவரது அருமைக் குடும்பத்தார் வாழ்க்கை நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு உதவி செய்வதற்காக பி. பாலசுப்பிரமணியம் நினைவு நிதி ஒன்று திரட்டுவதென்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

பி. பாலசுப்பிரமணியம் அவர்களை அறிந்தவர்களும், அவர்களது தொண்டினைப் போற்றுபவர்களும் இந்த நினைவு நிதிக்குத் தாராளமாக நன்கொடை அளிக்க வேண்டுமென்று இக்கூட்டம் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றது.

பி. பாலசுப்பிரமணியம் நினைவு நிதிக் குழுவின் நோக்கத்தை உடனடியாக நிறைவேற்ற, கீழ்க்காணும் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர் :

தமிழவேள் பி. டி. இராசன், எம். எல். சி.

துணைத் தலைவர்கள் :

திருவாளர்கள் அண்ணாதுரை, எம். எல். ஏ.
வி. வி. இராமசாமி, எம். எல். சி.
பேராசிரியர் எம். இரத்தினசாமி,
(முன்னாள் துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)
டாக்டர் மதுரம் எம். எல். ஏ.
(திருச்சி)

செயலாளர் :

க. அன்பழகன், எம். எல். ஏ.

பொருளாளர் :

என். ஆர். சடகோபன்,
39, வேளாளர் தெரு, புரசை, சென்னை-7.

செயற்குழுவினர் :

திரு. இரா. நெடுஞ்செழியன்
,, வே. ச. விசுவநாதம் (வாணியம்பாடி)
,, கு. மு. அண்ணல்தங்கோ (வேலூர்)
,, பி. ஆர். கோகுலகிருஷ்ணன்
,, க. இராசாராம்

18-10-58 இதழில்

புலித்தேவனா, கட்டபொம்மனா ?

அறிந்தவர் எழுதும்

ஆராய்ச்சித் தொடர்கட்டுரை

வெண்பாப் போட்டி-28.

ஈற்றடி :

பத்தரையும் சித்தரையும் பார்.

முடிவு தேதி 18-10-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

★ சிவகாமி ★

திருவனந்தபுரம் பாசஞ்சர் சங்கரநயினார் கோவில் ஸ்டேஷனில் வந்து நின்றது.

அதுவரை மூடியிருந்த ஜன்னலைத் திறந்துகொண்டு கிழக்கு நோக்கி எட்டிப்பார்த்தான் ராஜாமணி. உச்சியில் பளிச்சிட்ட மின்விளக்கு காரணமாக, தொலைவிலிருந்தாலும் கோவில் கோபுரம் அவனது கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது இருட்டையும் விலக்கிக்கொண்டு.

மிகக் குறைந்த நேரமே நின்றுவிட்டு ரயில் புறப்பட்டது.

ஆயிற்று! அடுத்த ஸ்டேஷன் பாம்பக்கோவில் சந்தை. பிறகு கடையநல்லூர் வந்துவிடும். அங்கே சரியாக ஒன்பதரை மணிக்குப் போக வேண்டும் ரயில். இன்று தாமதமாக வருகிறது. அனேகமாக அங்கே போய்ச் சேர பதினொன்றுக்குமேல் ஆகிவிடும். வயிறு பசிக்கிறது. இந்த நேரத்தில் ஸ்டேஷனுக்கு எதிரில் இருக்கும் 'மாவடிக்கால் ராவுத்த'ரின் கடை திறந்திருக்குமோ, என்னவோ! திறந்திருந்தால், இரண்டு மூன்று முறுக்குகளையும், வாழைப் பழங்களையும் விண்டு வாயில் போட்டுக்கொண்டு, அதற்குமேல் நல்ல டீ ஒன்றைக் குடித்துவிட்டு, ஒரு கட்டுப்பீடியும் நெருப்புப்பெட்டியும் வாங்கிக்கொண்டு புறப்பட்டுவிடலாம். கடையநல்லூரிலிருந்து சொக்கம்பட்டி அவ்வளவு அதிக தூரம் இல்லை. மிஞ்சி மிஞ்சிப்போனால் நாலு மைல் தூரம் இருக்கும்; அவ்வளவுதான்! ஒன்றரைமணி நேரம் போதும் அங்கே போய்ச்சேர, நேரே கிருஷ்ணபுரத்துப் பாதையில் நடக்கவேண்டியதுதான் கிருஷ்ணபுரப் பாதைதான் நல்லது. அதை விட்டு விட்டு கடையநல்லூரில் ஊருக்கு மத்தியில் போகும் பாதை வழியாகப் போனால் எல்லாம் கெட்டுவிடும். அங்கே தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். தப்பித்தவறி யாருடைய கண்ணிலாவது பட்டாக வேண்டியிருக்கும். அந்தப் பாதை வேண்டாம். கிருஷ்ணபுரத்து வழியாகத்தான் செல்ல வேண்டும். அதுவும் ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கும் பெரியகுளத்துக் கண்மாய் வழிதான் நல்ல வழி. அங்கே ஆள்நடமாட்டம் இருக்காது என்பது மட்டுமல்ல, அந்த வழியாகப் போனால் நடந்துபோக வேண்டிய தூரத்திலும் அரைமைல், முக்கால் மைல் மிச்சப்படும். ஆகவே, அந்த வழியாகத்தான் போக வேண்டும்.

சொக்கம்பட்டிக்குப் போய்ச்சேர இரண்டு மணி ஆகிவிடும். அங்கே போய்ச் சேர்ந்ததும், முதல் காரியமாக செல்லையா வீட்டுக்குத்தான் போகவேண்டும். செல்லையா வெளித் திண்ணையில்தான் படுத்திருப்பான். தன்னைமறந்து தூங்கும் அவனை எழுப்ப, கூச்சல் போட வேண்டியதில்லை. மேலே இலேசாகக் கைவைத்தால் போதும்; அவன் உடனேயே எழுந்துவிடுவான். அவ்வளவு உஷாரான பேர்வழி அவன். அவனை எழுப்பிக் கூப்பிட்டுக்கொண்டு பக்கத்திலிருக்கும் அவனுடைய விளங்காட்டுக்குப் போகவேண்டும். அங்கே போய் அமைதியாக உட்கார்ந்துகொண்டு அவனிடம் திட்டங்களையெல்லாம் வெளியிட வேண்டும். சிவகாமிக்குக் கல்யாணம் நடக்கப் போவதைப்பற்றித் தகவல் கொடுத்த அவன், அந்தத் திட்டத்துக்குக் குறுக்கே நிற்கமாட்டான். அவனிடம் சிவகாமி அப்போது எங்கே இருப்பாள் என்ற விவரத்தைக் கேட்டுக்கொண்டு, அவனை அவன் வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட்டு நேரே சிவகாமி இருக்கும் இடத்துக்குச் செல்ல வேண்டியதுதான். அவள் மறுநாள் இரவில் ஆசையோடு கல்யாணம் செய்துகொள்ளப்போகும் மணவாளனைப் பற்றிய கனவுகளில் ஆழ்ந்திருப்பாள். ஒன்றையும் இனிமேல் யோசித்துப் பார்க்கவேண்டியதில்லை. ஒரே வீச்சு! அவ்வளவுதான்; அவள் கதை அதோடு முடிந்துவிடும். முடிந்தால் தப்பித்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். முடியாவிட்டால் – யாராவது பார்த்து அடையாளம் கண்டுகொண்டால் – நேரே போலீஸ் ஸ்டேஷனிலேயே சரணடையவேண்டியது. சொக்கம்பட்டியில் போலீஸ் ஸ்டேஷன் கிடையாது; கடையநல்லூரில்தான் இருக்கிறது. அங்கேதான் சரணடைய வேண்டும். அந்த சப்-இன்ஸ்பெக்டர்கூடத் தெரிந்தவர்தான். அவரிடம் விவரங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் அடி, உதை ஒன்றும் கிடைக்காமல் பார்த்துக்கொள்வார். சிவகாமியைத் தீர்த்துக் கட்டிவிட்டு, அந்தக் கத்தியில் தோய்ந்திருக்கும் இரத்தம் காய்வதற்குள் நேரே அங்கே போய்விட வேண்டியதுதான். தப்பித்துக் கொள்ள முயற்சி செய்யலாம் என்றாலும் என்றைக்காவது போலீஸ்காரர்களிடம் பிடிபட்டுத்தான் ஆகவேண்டும். அவர்களாகத் தேடிக் கண்டு பிடித்து விட்டால் அந்த ஆத்திரத்தில் ஏராளமாக அடித்து விடுவார்கள். சமயத்தில் சித்திரவதைகூடச் செய்துவிடுவார்கள். அதனால் நாமேநேராகப் போய்விடுவதுதான் நல்லது. அதுவும் தவிர, தப்பித்துக்கொண்டு போய்த்தான் என்ன செய்ய இருக்கிறது? அவளைக் கொன்றுவிட்டு எப்படி நிம்மதியாக வாழமுடியும்? சிவகாமியே போய்விட்ட பிறகு, பிறகு யாருக்காகத்தான் வாழவேண்டும்? வேண்டியதில்லை; நிச்சயமாக வேண்டியதில்லை.

வழக்கு நடக்கும். வக்கீல் வைத்துக் கொள்ளப்போவதில்லை. குற்றம் செய்யாமலிருந்தாலல்லவா நியாயத்தை எடுத்துக் காட்டுவதற்கு வக்கீல் வைத்துக்கொள்ள வேண்டும்! குற்றத்தை எங்கும் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கும்போது...! கோர்ட்டில் விசாரணை முடிந்து, தீர்ப்புச் சொல்லுவார்கள். கொலைக்குற்றத்துக்குத் தூக்கு, அல்லது ஆயுள் தண்டனைதான். எந்தத் தண்டனையானால் என்ன, எல்லாம் ஒன்றுதான்! எப்பொழுது பார்த்தாலும் அவளை நினைத்துக்கொண்டே, அவளை வேறொருவனின் மனைவியாகப் பார்த்துக்கொண்டே தினம் தினம் செத்துக் கொண்டிருப்பதைவிட, உடனேயே உயிரைப் போக்கிவிடும் தூக்குத் தண்டனை அவ்வளவு கொடுமையானதல்ல. மனதுக்குப் பிடித்த காரியத்தைச் செய்து முடித்துவிட்ட நிம்மதியோடு வாழும் ஆயுள்தண்டனையும் சிரமமானதல்ல!

அதற்குப் பிறகு ..?

அதற்குப் பிறகு நினைப்பதற்கோ, செய்வதற்கோ ஒன்றுமில்லை; ஒரே சூனியம்தான்!

அந்தச் சூனியத்தை எண்ணிப் பார்க்கப் பயந்தோ என்னவோ, ராஜாமணியின் வலதுகை அவனை அறியாமலே அவனது இடையைத் தடவிப் பார்த்தது. அங்கே மிகுந்த பாதுகாப்போடு குடியிருந்த அவனுடைய கத்தி, அவனை நிம்மதியாகப் பெருமூச்சு விடவைத்தது.

பாம்பக்கோவில் சந்தை வந்துவிட்டது!

செவ்வாய்க்கிழமையானால் கடையநல்லூருக்கும் தென்காசிக்கும் போகும் ஜனங்கள், அந்த ஸ்டேஷனில் ஏராளமாக ஏறுவார்கள். செவ்வாய்க்கிழமைதான் வாரச்சந்தை நாள். சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து ஏராளமான விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்பனைக்குக் கொண்டு வருவார்கள். அரிசி, உப்பு, புளியிலிருந்து எல்லாமே விற்பனைக்கு வந்திருக்கும், வாங்குவோரும் விற்போருமாக கூட்டம் நிரம்பி வழியும். மாலை சந்தை முடிந்ததும் மேற்கே போகிற வண்டி இதுதான். இதைத் தவறவிட்டால் காலை எட்டு மணிக்குத்தான் அடுத்த வண்டி வரும். அதனால் இதிலேதான் எல்லோரும் ஏறியாக வேண்டும்.

இன்று செவ்வாய்க்கிழமை இல்லை. அதனால் அங்கே கூட்டமும் இல்லை. ஸ்டேஷன் அழுது வடிந்துகொண்டிருந்தது. யாரும் ஏறாமல் போய்விட்டால், அது பெரிய அவமானமாகப் போய்விடப் போகிறதே என்று எண்ணியோ என்னவோ 'பெரிய மனது வைத்து' ஒரே ஒருவர் மட்டுமே வண்டியில் ஏறிக்கொண்டார். அந்த வரவுக்கு வகை செய்வதுபோல, ஒரே ஒரு ஆள் மட்டுமே டிக்கட்டைக் கொடுத்துவிட்டு ஸ்டேஷனுக்கு வெளியே போவது ஸ்டேஷன் மாஸ்டர் அறையின் மங்கிய வெளிச்சத்தில் இலேசாகத் தெரிந்தது.

வண்டி புறப்பட்டது.

இறங்கவேண்டிய ஸ்டேஷன் அருகில் வந்துவிட்டதனாலோ என்னவோ, ராஜாமணிக்குக் கடந்துபோன சம்பவங்களின் நினைவுகள் வரிசையாக வரத்தொடங்கின.

அவன் கண்களை மூடிக்கொண்டே பழைய நினைவுகளில் மிதந்தான்.

★

சொக்கம்பட்டி திருநெல்வேலி மாவட்டத்தில் கடையநல்லூருக்கு அருகிலுள்ள ஒரு அழகிய கிராமம். உழைப்பாலேயே வாழ்கிற மறவர் மக்களை அதிகமாகக் கொண்ட அந்த ஊர், ஒரு காலத்தில் ஜமீந்தார்களின் ஆட்சியில் இருந்தது. காலக்கிரமத்தில் ஜமீன் காலாவதி ஆகிவிடவே, சாதாரண கிராமங்களில் ஒன்றாக அது திகழ்ந்தது. அந்த ஊர் மறவர் குடியில் தனிச் செல்வாக்குப் பெற்றவர் ராமசாமித் தேவர். ஏராளமான நில புலங்களுக்குச் சொந்தக்காரரான அவருடைய கட்டளையைச் சிரமேற் கொண்டு செயல்பட, எத்தனையோ பேர் காத்துக்கிடந்தனர்.

செல்வமும், செல்வாக்கும் நிறைந்த அவருடைய ஒரே மகள் சிவகாமி.

ப. புகழேந்தி

அற்புதமான அழகி. குறைவற்ற கிராமத்து எழில் அவள் மேனி எங்கும் தவழ்ந்தது. நல்ல சிவப்பு நிறம் அவளுக்கு. எதிரில் நிற்பவர்களைத் தவிப்பில் ஆழ்த்தும் சக்தியைத் தாமாகவே பெற்றவை அவளுடைய கண்கள். முறையான ஒழுங்கோடு உருவாக்கப்பட்டிருந்த மூக்கும், விரிந்த பூவின் இதழ் போன்ற கன்னங்களும், உயிர் மிதக்கும் உதடுகளும், தொல்லைகளை மறக்கச் செய்யும் சிரிப்பைச் சிந்திக் கொண்டேயிருக்கும் வாயும்...

அவளுடைய அருமையான கண்கள்தாம் ராஜாமணியைக் கவர்ந்து விட்டன. ராஜாமணி ராமசாமித் தேவரின் எதிர்வீட்டுக்காரன். அவனுக்கு அப்பாவும் இல்லை; அம்மாவும் இல்லை. கூடப்பிறந்த ஒரே ஒரு தம்பி மட்டுமே அவனுக்குத் துணை. இருவரும் அவர்களுடைய முன்னோர்கள் தேடிவைத்த 'பத்து மரக்கால் விதைப்பாட்'டில் எதையாவது பயிரிட்டு, விவசாயம் செய்துவந்தார்கள். அந்த நிலமும் நல்ல நிலம்தான். அதனுடைய விளைச்சலைவிட அதற்கு இருக்கும் தனிச் சிறப்பு அது ராமசாமித் தேவரின் நிலங்களுக்கு மத்தியில் இருப்பதுதான். ஆமாம்; அந்த நிலத்தைச் சுற்றியும் ஏன், அந்தப் பகுதி பூராவிலும் உள்ள நிலங்கள் அனைத்தும் அவருடையவையே.

– அடுத்த இதழில் முடியும் –

தென்றல்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 198387 சென்னை-600 008

4-10-58

போலந்துப் புரட்சியும் ரஷ்யக் கொடுமையும்

உலகின் பெரும் பகுதி நாடுகளை அடிமைப்படுத்தி காலனியாக்கிக் கொண்ட பிரிட்டனும் பிரான்சும்-அவைகள் கைப்பற்றிய நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களின் புரட்சியும்-நாட்டிற்காக தன் இன்னுயிரையும் ஈந்த எண்ணற்ற வீரர்களைப்பற்றிய வரலாறுகளையும் அறிந்த நமக்கு போலந்தின் வரலாற்றை நோக்கும்போது போலந்து மக்களின் வீரம் நிறைந்த போராட்டங்களும், போராட்டத்தை ஒடுக்க ரஷ்ய ஏகாதிபத்தியம் செய்த கொடுமைகளும் நம்மை திடுக்கிட வைக்கின்றன.

ஐரோப்பாவிலும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலும் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள்-தங்களின் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்ட மேற்கொண்ட கொடுமைகளைவிட போலந்தில் ரஷ்யா தன் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டச் செய்த கொடுமைகள் மிகப் பயங்கரமானவையாகும். ரஷ்யாவை எதிர்த்துப் போலந்து மக்கள் செய்த புரட்சியும், ரஷ்யா போலந்து மக்களுக்கு இழைத்த கொடுமைகளைப் போலவும் ஐரோப்பாவிலேயேவேறு எந்த நாட்டிலும், வேறு எந்தஏகாதிபத்தியத்தாலும் நடைபெற்றதில்லை என்றே கூறலாம்.

இன்றைய போலந்து ரஷ்ய சார்பு நாடுகளில் ஒன்ருகும். ஆனல் போலந்தின் கடந்த கால வரலாறு-போலந்தை ரஷ்யா எப்போது

புரட்சியினை அடக்குவதே தொழிலாகக் கொண்டார்!

அடிமையாக்கியது? ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போலந்து மக்களின் வீர மிக்க போராட்டங்கள்--அதை நசுக்க ரஷ்ய கொடுங்கோன்மையினர் செய்த மனிதத் தன்மையற்ற செய்கைகள் ஆகியவைகளை இக்கட்டுரையின் மூலம் தெரிந்து கொள்ளுபவர்கள் அங்கேரியில் தற்போதைய ரஷ்ய ஏகாதிபத்தியம் செய்த கொடுமைகள்பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். மன்னர்களிடம் இருந்த கொடுங்கோன்மை எண்ணங்கள் இன்றளவும் ரஷ்யர்களிடம் மறைந்துவிடவில்லை என்பதை மெய்ப்பித்துவிட்டது அங்கேரி!

18-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் தான் போலந்து ரஷ்ய சாம்ராஜ்யத்திற்கு அடிமையானது. அப்போது ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த முதலாம் நிக்கோலஸ் (1825-55) காலத்தில் போலந்தில் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து 60 ஆயிரம் பேர்கள் கொண்ட புரட்சியாளர்கள் ராணுவம் ரஷ்ய ராணுவத்துடன் கடும் போர் மூண்டது. ரஷ்யா தன் முழு பலத்தையும் கொண்டு புரட்சியாளர்களின் ராணுவத்தைச் சின்னபின்னமாக்கியது. புரட்சித் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் நாடு கடத்தப்பட்டனர். போலந்தின் தலைநகரான வார்சா முழுவதும் ரஷ்யாதுப்பாக்கி முனையில் சூழ்ந்துகொண்டது. போருக்குப்பின் ஆயிரக்கணக்கான போலந்து அகதிகளை மேற்கு ஐரோப்பாவுக்குத் துரத்தினன்.

போலந்தின் கலாச்சாரத்தையும், கலாசாரத்தை நினைவுபடுத்தும் சின்னங்களையும் பூண்டோடு அழித்து ரஷ்யக் கலாச்சாரத்தைப் புகுத்தினன். அதோடு முதலாம் நிக்கோலஸ் மன்னனும் வாழ்விலிருந்து விடை பெற்றுக்கொண்டான்.

இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்கு வந்ததும் புரட்சியாளர்கள் அணிவகுப்பு உருவானது. ஆரம்பத்தில் மன்னன் மக்களிடம் அன்பு செலுத்துவதாகவும் காட்டிக்கொண்டான். இதன்மூலம் போலந்து மக்களின் புரட்சித் தீயை அணைத்துவிட முடியும் என்று நம்பினன். இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்கு வந்ததும் போலந்தின் தலைநகரான வார்சாவை பார்வையிட வந்தான். போலந்தின் அரசியலை நடத்தும் பொருட்டு ரஷ்ய விசுவாசிகளைக் கொண்ட பார்லிமெண்ட் ஒன்றை நிறுவினன்.

முதலாம் நிக்கோலஸ் காலத்தில் மூடப்பட்டிருந்த சர்வ கலாசாலைகளையும் பத்திரிகைகளையும் மீண்டும் நடத்த அனுமதித்தான். போலந்து மக்களிடம் தான் கொண்டிருக்கும் அன்பைக் காட்டிக்கொள்ள போலந்தில் உள்ள லோவிக்ஸ் இளவரசியைதிருமணம் செய்துகொண்டான்.

ஆனல் மன்னன் கண்ட கனவு பகற் கனவாயிற்று. மீண்டும்அமைதி குலைந்தது "உன்னுடைய மயக்கு மொழி எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்குவேண்டியது போலந்தை விட்டு ரஷ்யா வெளியேற வேண்டும்" இவ்வாறு கூறி புரட்சி செய்தனர். "போலந்து என்ற நாடு இனி உங்களுக்கு இல்லை. ஆனல் ஒரு போலந்து இருக்கிறது. அதுதான் ரஷ்ய-போலந்தாகும்" இவ்வாறு போலந்தின் வைசிராயான இளவரசன் கோர்ச்சாகோவ் மூலம் நிக்கோலஸ் பொதுமக்களுக்கு அறிவித்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் நிக்கோலஸ், மன்னரானதைக் கொண்டாட வார்சா முழுதும் கோலாகலமாக விழா அலங்கரிக்கப்பட்டிருந்தது. புரட்சியாளர்களுக்கு எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல் ஆனது. மாணவர்கள் கொதித்தெழுந்தனர். தெருக்களில் செய்திருந்த அலங்கார வளைவுகளை நாசம் செய்தனர். விழாவை முன்னிட்டு நாடகக் கொட்டகைகளில் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்ச்சிகளின்போது குண்டுகளை வீசி தீ வைத்தனர். இதைத் தொடர்ந்து சுமார் ஒரு வாரம் ரஷ்ய ராணுவத்தினருக்கும் புரட்சியாளர்களுக்கும் கடும் போர் நடைபெற்றது. அதன் பிறகே கலவரம் அடங்கியது.

புரட்சியாளர்களிடையே தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் பிளவு ஏற்பட்டதன் காரணமாக சிலர் சர்க்காரிடம் சரணடைந்தனர். போர் உடனே துவங்கப்பட வேண்டும் என்பது தீவிர வாதிகளின் திட்டம்-ஆனல் அதை மிதவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. மிதவாதிகளுக்கு வீயூலோபோல்ஷி என்பவன் தலைவனுனன். இத்தாலியில் கரிபால்டியின் ராணுவத்தில் தலைவனுக இருந்த ஜெனரல் லட்விக் மியரோஸ்போவ்ஷி என்பவன் தீவிரவாதிகளுக்குத் தலைவனுனன்.

வார்சாவிலும் போலந்தின் மற்றைய பகுதிகளிலும் விடுதலை வேட்கை கொண்ட மாணவர்களும் நடுத்தரக் குடும்பத்தினர்களும் கலைஞர்களும் கூட்டம் கூட்டமாக தெருக்களில் கூடி புரட்சியாளர்களுக்கு நிதி திரட்டினர்கள். துப்பாக்கிகளையும், வெடி மருந்துகளையும் ரஷ்ய ராணுவக் கிடங்குகளில் இருந்து கடத்தினர்கள். பிரமாண்டமான புரட்சிக்கு போலந்து மக்கள் தயாரானர்கள்.

1861 பிப்ரவரி 27-ல் மூடுபனி நிறைந்த காலை வேளையில் வார்சாவின் பழைய மார்க்கெட்டில் மக்கள் கூடி ஊர்வலமாக கிளம்பினர். அக்கூட்டம் பிறகு 30000 பேர்களைக் கொண்ட பிர்மாண்ட ஊர்வலமாக உருவாயிற்று. ஆண்களும் பெண்களும் மாணவர்களும் அணிவகுத்துச் சென்றனர். மாணவர்கள் புரட்சிக் கொடியை கையிலேந்தி போலந்தின் தேசிய இசையை இசைத்துக்கொண்டே சென்றனர். ஊர்வலம் சிகிஸ்மண்டு சதுக்கத்தை அடைந்தபோது ரஷ்ய குதிரைப் பட்டாளம் ஊர்வலத்தை நிறுத்தி கலைந்து போக எச்சரித்தது. ஆத்திரம் கொண்ட மக்கள் கற்களை வீசி ராணுவத்தைத் துரத்தவே கோட்டைக்குள் இருந்த ராணுவம் துப்பாக்கி ஏந்தி சுட்டனர். மூன்று முறை நிராயுதபாணியாக நின்ற மக்கள்மீது குண்டு மழை பொழியப்பட்டது. அணிவகுப்பின் முன் நின்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களும் மாணவர்களும் பல தலைவர்களும் கொல்லப்பட்டனர். தங்களின் கணவன்மார்களும் மைந்தர்களும் மாண்டபின் தாங்களும் வாழ விரும்பாத தாய்மார்கள் பச்சிளம் குழந்தைகளை கையிலேந்தி ரஷ்ய ராணுவத்தை நோக்கி எக்காளமிட்டனர். "எங்களையும் கொன்றுவிடு" என்று மார்பைக் காட்டி மண்டியிட்டு உட்கார்ந்தது தான் தாமதம், இரக்கமற்ற ரஷ்ய ராணுவத்தினர் தாய்மார்கள் என்றும் பாராது சுட்டுக் கொன்றனர். ஒன்றிரண்டு பேர்கள் தப்பி ஓடுவதையும் விரும்பாத குதிரைப் படையினர் தன் வாள் கொண்டு தலைகளைக் கொய்தனர். அத்துடன் அன்று பிற்பகலே புரட்சி ஒடுக்கப்பட்டது.

பதவி எலும்புத் துண்டை வீசியதும் வாலை ஆட்டும் நாய்க்குணம் படைத்த "மக்கள் துரோகிகள்" நமது நாட்டில் உள்ளதுபோல் அங்கும் இல்லாமல் போய்விடவில்லை. மிதவாதிகளின் தலைவனுன வீலோபோலோஷியை நிக்கோலஸ் மன்னன் தன் வசப்படுத்தி போலந்து பார்லிமெண்டு தலைவனுக அமர்த்தினன். புரட்சியை கைவிடும்படியும், புரட்சியாளர்களுக்கு மன்னிப்பளிப்பதாகவும் வீலோபோலோஷிமூலம் மன்னன் நிக்கோலஸ் வேண்டுகோள் விடுத்தான். அப்படியும் மக்களிடம் புரட்சியுணர்ச்சி மங்கிவிடவில்லை. தீவிர வாதிகளின் தலைவனுன மியரோஸ்லோஷியின் தலைமையில் போட்டி சர்க்கார் ஒன்று ரகசியமாக வேலை செய்தன.

அமைதியான சூழ்நிலையில் மீண்டும் மன்னன் நிக்கோலஸ் தன் தம்பியான கான்ஸ்டாண்டினை போலந்தின் வைசிராயாக நியமித்தான். மீண்டும் அமைதி குலைந்தது. கான்ஸ்டாண்டின் போலந்திற்கு வைசிராயாவதை மக்கள் வெறுத்து ஆர்பாட்டம் செய்தனர். கான்ஸ்டாண்டின் ஏன் வார்சாவில் பதவி ஏற்பதற்காக காலடி வைத்த உடனேயே தையற் தொழில் செய்யும் ஓர் இளைஞன் துப்பாக்கியால் கான்ஸ்டாண்டினைச் சுட்டுக்கொன்ருன். அதிலிருந்து துப்பாக்கிப் பிரயோகங்களும், தூக்குத் தண்டனைகளும் நிறைவேற்றப்பட்டன.

புரட்சியாளர்களில் பெரும்பாலும் இளைஞர்களாக இருந்ததால் இளைஞர்களைப் புரட்சியாளர்களிடமிருந்து பிரித்துவிட்டால் புரட்சியை அடக்கிவிடலாம் என்று நினைத்த மக்கள் துரோகி வீலோபோல்ஷி போலந்து நாட்டு இளைஞர்கள் ராணுவத்தில் சேர வேண்டும் என்று கட்டாய ராணுவ முறையை அமுலுக்குக் கொண்டு வந்தான் சர்க்கார் ராணுவத்தில் சேர விரும்பாத இளைஞர்களும் மாணவர்களும் இரவோடு இரவாக காட்டிற்குள் புகுந்து அங்கு கொரில்லாப் படையை உருவாக்கினர்கள்.

தீவிர வாதிகளின் தலைவன் போருக்குத் தயாராக இருக்கவேண்டும் என்று மக்களுக்குவேண்டுகோள் விடுத்தான். போலந்திலும், லிதுவேனியாவிலும் 1,50,000 ரஷ்ய ராணுவம் இருந்தது. ஆனல் புரட்சியாளர்களின் ராணுவம் மிகக் குறைந்த அளவில் 10,000 பேர்கள்தான் இருந்தார்கள். புரட்சி ராணுவத்திற்குப்போதிய பணவசதியும், ஆயுத பலமும் இல்லாத நிலையிலும், போலந்தின் நிலப் பிரபுக்களும் புரட்சியாளர்களைக்கைவிட்டுவிட்டனர். இவ்வளவு குறைந்த வசதிகளைப் பெற்றிருந்தும் நம்பிக்கையும் ஆர்வமும் கொண்டு போரிட்டனர். 1863 ஜனவரி 22ல் ஆரம்பமான போர் ஓர் வாரம் நீடித்து நடைபெற்றது. போலந்திலும், லிதுவேனியாவிலும் புரட்சி ராணுவம் ஊடுருவிப் போர் புரிந்தது. நகரங்களிலும் கிராமங்களிலும் காடுகளிலும் உக்ரமான போர் நடைபெற்றது. குறைந்த ஆயுதங்களைக் கொண்டு போரிட்டபோதிலும் அவர்களுக்குப்போதிய உணவு

— 8-ம் பக்கம் —

புதுமையினைப் பெருக்குதற்குத் தடையாய் நின்ருர்!

M211, N5t1
N58.5.16

கண்ணதாசன்

சற்றேறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குள்ளாகவே தோற்றமெடுத்த சிவகெங்கைச் [illegible]ற்றை, வரமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், இவர்களில் எவரும் சேதுபதி நாட்டின் ஒரு பகுதியாக சிவகெங்கைச் சீமை இயங்கி வந்ததென்பதையும், சேதுபதி ஒருவரால் அது பிரித்து விடப்பட்டதென்பதையும் மறுக்கவில்லை.

தென்பாண்டி நாட்டில், முகவை எனப்படும் இராமநாதபுரம் நாடு சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்புவரை, மிகப் பெரிய நிலப் பரப்பாக இருந்து வந்தது. இப்போதுள்ள சிவகெங்கைச் சீமையும், புதுக்கோட்டை நிலமும், தஞ்சையின் ஒரு பகுதியும் அதில் அடங்கியிருந்தன. இதுவே மறவர் நாடு என்று பெயர் பெற்ற நாடாக விளங்கிற்று. சேது நாட்டின் தோற்றத்தை இராமாயணக் கதையோடு ஒட்டுவைத்துப் பேசுவர் சிலர். அப்பகுதி இராமனுக்கு உதவிய காரணத்தால், இராமனால் உண்டாக்கப்பட்டதென்பர். துளியும் வரலாற்றுச் சான்றில்லாத இந்தப் பொய்க்கதையை யாரும் நம்புவதற்கில்லை. ஏறக்குறைய சுந்தர பாண்டியன் காலத்திலும், அதற்குப் பிறகும் தான் மறவர்நாட்டை சேதுபதிகள் ஆண்டதாக வரலாறு காட்டுகிறது. அதிலும் கி. பி. 1605-ல் அரியணை ஏறியதாகக் கருதப்படும் சடையக்கத் தேவர் என்னும் உடையணசேதுபதி காலத்தில்தான் வரலாறு ஓரளவு தெளிவாக இருக்கிறது. சடையக்கத் தேவரின் காலத்தில் மதுரையின் அரசு கட்டில் வீற்றிருந்தவர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர் ஆவார். அந்நாளில் மறவர் நாட்டில் கள்வர் பயம் அதிகம். இராமேஸ்வரம் போன்ற புண்ணியஸ்தலங்களுக்குத் தித் திருடுபவர் அதிகம். அவர்களை ஒடுக்கி, அந்தப் பகுதிகளை அமைதிப்படுத்தி பயமற்ற தன்மையை உண்டாக்கியவர் சடையக்கத்தேவர். மதுரை நாயக்க வம்சத்தின் வரலாற்றுப்படி, நாயக்கர்களிடமிருந்து சடையக்கத்தேவர் பெற்ற பரிசே முகவை நாடு எனக் கூறப்படுகிறது. இதற்கு முந்திய மறவர் சீமை எத்தகைய அதிகாரங்களைப் பெற்றிருந்தது, எந்த எல்லைகளுக்குள் அடங்கியிருந்தது என்பவற்றைச் சரியாகக் கண்டு கொள்ள இயலவில்லை.

சடையக்கத்தேவருக்குப் பின்னால், 1622-ம் ஆண்டு, அவர் மகன் கூத்தன் சேதுபதி என்பவர் மன்னராகி பதிமூன்று ஆண்டு காலம் ஆண்டபின் இயற்கை எய்தினார். அவருக்குக் குழந்தைகள் இல்லாததால், அவருக்குப்பின் அவரது சகோதரர் தளவாய் சேதுபதி அரசுரிமை பெற்றார். மேற்குறித்த சடையக்கத்தேவரின் காதற்கிழத்தி மகனும், காளையார் கோவிலை ஆண்டு வந்தவருமான தம்பித்தேவருக்கும், தளவாய் சேதுபதிக்குமிடையே பகைதொடங்கி முற்றியது. அப்போதுமதுரையை ஆண்டவர் திருமலை நாயக்கர். நாயக்கரைச் சேர்ந்தவர்களுக்கும், அவருக்கும், தங்கள் மூதாதையரால் வழங்கப்பட்ட மறவர் நாடு ஓங்கி வளர்வது பிடிக்கவில்லை. இந்த நேரத்தில் இதை அறிந்த தம்பித்தேவர், திருமலை நாயக்கரின் உதவியை நாடினார். இதைப் பயன்படுத்திக்கொண்ட திருமலை நாயக்கர் தளவாய் சேதுபதியை அரியணையிலிருந்து விலக்கி தம்பித்தேவரையே மறவர் நாட்டின் மன்னராக்கியிருப்பதாக அறிவிக்கார். அவருக்குப் படையும், பணமும் உதவினார். இராசப்பையர் என்னும் தளபதி அந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். மறவர் நாடு தம்பித்தேவரின் கீழ் வந்தது. இந்த மாற்றத்தால் மறவர் மக்களின் மனக்கசப்பு வளர்ந்தது. மீண்டும் கொலை, கொள்ளைகள் வளர்ந்தன. திருமலை நாயக்கரிடம் மறவர் நாட்டு மக்கள் தளவாய் சேதுபதியையே மீண்டும் மன்னராக்க வேண்டுமென்று முறையிட்டுக்கொண்டார்கள். அதன்படி, தன் சிறையிலிருந்த தளவாய் சேதுபதியை விடுவித்து, மீண்டும் இராமநாதபுரத்து மன்னராக்கினார் திருமலை நாயக்கர். இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப்பின், 1646-ல் தளவாய் சேதுபதி தம்பித்தேவரால் கொலை செய்யப்பட்டாரெனவும், திருமலை நாயக்கர் நடு நின்று இராமநாதபுரம் சீமையை மூன்றுகப் பிரித்து, இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட பகுதியை தளவாய் சேதுபதியின் தமக்கை குமாரரான இரகுநாதத் தேவருக்கும், சிவகெங்கைப் பகுதியைத் தம்பித்தேவருக்கும், திருவாடானைப் பகுதியை இரகுநாதத் தேவரின் இளைய சகோதரர்களாகிய தணக்கத்தேவருக்கும், நாராயணத் தேவருக்குப் வழங்கினார் எனவும் கூறப்படுகிறது. இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு தணக்கத்தேவரும், தம்பித்தேவரும் காலமானதால் சிவகெங்கைப் பகுதியும், திருவாடானைப் பகுதியும் மீண்டும் இராமநாதபுரத்தோடு சேர்ந்துவிட்டன. இரகுநாதத்தேவரே மறவர் நாட்டின் ஒரே தலைவரானார். 1647-லிருந்து 1672-வரை ஆண்ட இரகுநாதர், மைசூராரிடமிருந்து மதுரையைக் காத்து, திருப்புவனம், திருச்சுளி, பள்ளி மடம் முதலிய பகுதிகளைப் பெற்றார். மதுரை நாயக்கர்களுக்கு இவரே அரணாக விளங்கினார். இவர் 1672-ல் இறந்ததும், இராசசூய சேதுபதி என்பவர் பட்டத்துக்கு வந்து ஆறே மாதங்களில் கொல்லப்பட்டார். இவருக்குப் பின் இவர் தம்பி ஆதன இரகுநாத சேதுபதி அரசுரிமையை ஏற்று, மூன்றே மாதங்களில் இறந்தார். வாரிசில்லாமல் தவித்த மறவர்நாட்டுக்கு பழைய சேதுபதியின் உறவினரான கிழவன் சேதுபதி என்பவரை அரசராக்கினர் மறவர் நாட்டு மக்கள். இந்தக் காலம்தான் ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் தென்பாண்டி மண்டலத்துக்குள் நண்பர்கள்போலப் புகுந்து குழப்பம் விளைவித்த காலம். இந்தக் கிழவன் சேதுபதியும் மதுரைக்கு நண்பனாக விளங்கினான் என்றாலும், ருஸ்தம்கான் என்பவனின் படையெடுப்பிலிருந்து மதுரையைக் காத்து, பரராசகேசரி என்ற பட்டத்தைப் பெற்றான் என்றாலும், சில ஆண்டுகளுக்குள்ளாகவே மதுரை மன்னர்களோடு தகராறு முற்றியது. மதுரைப் படைகளைத் தோற்கடித்து, வேறுபுறம் எதிர்த்த தஞ்சைப் படைகளையும் தோற்கடித்து, பல பகுதிகளை இராமநாதபுரத்தோடு சேர்த்துக் கொண்டான் கிழவன் சேதுபதி. மதுரையை ஆண்ட முத்துவீரப்ப நாயக்கர் என்பவர் இறந்து, இராணி மங்கம்மாவின் கைக்கு

மதுரை ஆட்சி வந்தது. மங்கம்மாள் மதுரையைக் கைப்பற்றியதும் சூழ்ச்சியால்தான் என்பர். மங்கம்மாள் காலத்தில் கிழவன் சேதுபதியின் கை தென்பாண்டி மண்டலத்தில் வலுப்பெற்றிருந்தது. 1698-ல் மதுரையையே பிடித்துவிட்டான் கிழவன்சேதுபதி. எனினும் இராணியின் தளவாய் நரசப்பன் மறவர் பிடியினின்று மதுரையை விடுவித்தான். 1702-ல் மங்கம்மாளும், தஞ்சை அரசர் படைகளும், தளவாய் நரசப்பனும் சேது நாட்டின் மீது படை எடுத்தார்கள். இவர்கள் அனைவரையும் ஒருசேர வென்றான் கிழவன்சேதுபதி. தளவாய் நரசப்பையன் போரில் கொல்லப்பட்டான். இதன் பிறகு, மதுரைக்குக் கட்டுப்படாத ஓர் வல்லரசாக மறவர்சீமை விளங்கிற்று. கிழவன்சேதுபதியின் காலம் மறவர் நாட்டில் பொன் பூத்த காலம். இவன் மறவர் நாட்டை ஆண்ட நேரத்தில், இரண்டு நாயக்கர்களும், இராணி மங்கம்மாளும் மாறி மாறி மதுரையை ஆண்டு மடிந்தார்கள். 1706-ல் மங்கம்மாள் இறந்தாள். 1710-ல் மறவர்தலைவன், மங்காப் புகழ்பெற்ற மாவீரன் கிழவன் சேதுபதி காலமானான். கிழவன் சேதுபதிக்கு மராட்டியப் பெண்ணொருத்தி காதற்கிழத்தியாக இருந்தாள். சேதுபதிக்கு அவளிடம் பிறந்தவன் பவானி சங்கரத்தேவன் என்று குறிக்கப்படும் பவானிசிங் ஆவான். இவனுக்கே மறவர் நாட்டின் அரசுரிமையை வழங்க கிழவன் சேதுபதி விரும்பினான் என்றாலும், மறவர் மக்கள் வேண்டுகோளின்படி விஜயரகுநாத சேதுபதிக்கு முடிசூட்டினான்.

கிழவன் சேதுபதி இறந்ததும், விஜயரகுநாத சேதுபதியின் ஆட்சி 1711-ல் துவங்கிற்று. மறவர் மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்தும்கூட பவானி சங்கரன் அவனுக்கு விளைத்த தொல்லை அதிகம். புதுக்கோட்டை மன்னனையும், தஞ்சை மன்னனையும் துணையாகச் சேர்த்துக்கொண்டு அறந்தாங்கிக் கோட்டையில் இரகுநாத சேதுபதியைத் தாக்கினான். இங்கே சேதுபதிக்கு எதிராக படை கொடுத்துதவிய புதுக்கோட்டை மன்னனின் வரலாற்றை இரண்டு வரிகளில் நாம் அறிதல் வேண்டும்.

இந்தப் புதுக்கோட்டை மன்னனுக்கு புதுக்கோட்டையை வாங்கித் தந்தவன் கிழவன்சேதுபதியே ஆவான். அதற்குமுன் பல்லவராயன் என்பவன் புதுக்கோட்டையை ஆண்டுகொண்டிருந்தான். கிழவன் சேதுபதியின் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மனைவியான கதலி என்பவளின் சகோதரனை ரகுநாதத் தொண்டைமான் என்ற அந்த மன்னன். தன் மைத்துனனாக இருந்த அவனையே புதுக்கோட்டையின் மன்னனாக கிழவன்சேதுபதி ஆக்கினான். இதுதான் தொண்டைமான் பரம்பரையின் துவக்கம். இதற்குமுன் தொண்டைமான் பரம்பரையினருக்கு அந்த நாடு சொந்தமாய் இருந்ததில்லை. இந்த முதல் தொண்டைமானைச் சார்ந்தவர்களே விஜயரகுநாத சேதுபதிக்கு எதிராக பவானி சங்கரனுக்குத் துணைபுரிந்தார்கள்.

பவானிசங்கரன் அறந்தாங்கிக் கோட்டையைத் தாக்கும்போது விஜயரகுநாத சேதுபதி நோய்வாய்ப்பட்டான் எனவும், இராமநாதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறந்தான் எனவும், இறக்கும்போது கிழவன் சேதுபதியின் பேரனான சுந்தரேச சேதுபதியை அரசனாக நியமித்தான் என்றும், அதன் பிறகும் பவானி சங்கரன் படை எடுத்தான் என்றும், மாற்றி மாற்றி இரண்டொரு போர்கள் நடந்ததாகவும் சிலர் கூறுவர்.

ஆனால், 'சிவகெங்கைச் சரித்திரக் கும்மி' நமக்குத் தெரிவிக்கும் செய்தியிலிருந்து, விஜய சேதுபதியே பவானி சங்கரனால் துரத்தப்பட்டது தெரிகிறது. நாலுகோட்டை என்கிற மறவர் குறுநிலத்தை அப்போது ஆண்டவர் சுவான துரைராசன் எனப்படும் **சசிவர்ணத்தேவர்** ஆவர். விஜய சேதுபதியின் மகள் அகிலாண்ட ஈஸ்வரி நாச்சியார், இந்த சசிவர்ணத் தேவருக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தாள். பவானி சங்கரனால் துரத்தப்பட்ட விஜய சேதுபதி, நேரே மகளுடைய நகரமான நாலுகோட்டைக்கு வந்து சேர்ந்தார். ஆறாயிரம் பொன்னும், பூமியும் சீதனம் கொடுத்து, அகிலாண்ட ஈஸ்வரி நாச்சியாரை சசிவர்ணத் தேவருக்கு மணமுடித்துக் கொடுத்திருந்தார் விஜயசேதுபதி. இந்த சசிவர்ணத்தேவரால் அரண்மனை கட்டி, அழகுபடுத்தப்பட்டது சிவகெங்கை என 'சரித்திரக் கும்மி' ஆசிரியர் தெரிவிக்கிறார்.

விஜய சேதுபதி நாலுகோட்டைக்குத் தன் மகள் வீட்டுக்கு வந்ததும், கதிகலங்கி நிலை தளர்ந்து வந்த தன் அம்மானைக் கண்டு கண்ணீர் வடித்தார் சசிவர்ணத்தேவர். அவர் தோள்கள் தினவெடுத்தன. அந்நாளில் நாலுகோட்டையை சசிவர்ணத் தேவர் ஆண்டதுபோல், அவரது உறவினரான ஒய்யத்தேவர் என்பவர் பக்கத்து படமாத்தூர் சீமையை ஆண்டு வந்தார். வெங்கண பெரிய உடையணத் தேவர் என்பவர், அருகிலிருந்த சக்கந்திச்சீமையை ஆண்டு வந்தார். இந்த இரண்டு குறுநிலங்களையும் கோராமல் மாமன் விஜயசேதுபதியைக் கையோடழைத்துக் கொண்டு, தஞ்சையை நோக்கிப் புறப்பட்டார் சசிவர்ணத்தேவர். போகும் வழியில் புலி ஒன்று எதிர்ப்பட, அதைக் கொன்று, அதன் வாயில் அகப்படவிருந்த ஞானி சாத்தப்பையர் என்பவரைக் காப்பாற்றினார் சசிவர்ணர். உடனே அந்த ஞானியார், சசிவர்ணரின் வீரத்தைப் புகழ்ந்து, தஞ்சை அரசர் துளசிராவ் என்பவர் இதுபோன்ற ஒரு புலியை வைத்திருப்பதாகவும், அதை மடக்குவோருக்கு வேண்டிய உதவிகள் செய்வதாகக் கூறியிருப்பதாகவும், தஞ்சைக்குச் சென்று அந்த உதவியைப் பெறும்படியும் கூறினார்.

ஆசி பெற்றுப் புறப்பட்ட சசிவர்ணரும், விஜயசேதுபதியும் தஞ்சை சென்று ஒரு எல்லை விடுதியில் தங்கினர். குதிரையில் ஏறி தஞ்சை நகரில் வலம் வந்தார் சசிவர்ணர். தேவர் மகனின் கட்டுக்குலையாத உடல் அழகைக் கண்டு வியந்த கன்னியர் சிலர், அரண்மனை அரச கன்னியிடம் தெரிவிக்க, அரசகன்னி மாடத்திலிருந்து பார்த்து, மன்னரிடம் சொல்ல மன்னர் ஆளனுப்பி தேவரை அழைத்துவரச் செய்தார். தன் வரலாற்றைக் கூறி உதவி கேட்டார் சசிவர்ணர். வேங்கையைக் கொல்ல இயலுமா என்றார் துளசி மன்னர். [illegible] சசிவர்ணர். ஒரு குறிப்பிட்ட நாளில், தஞ்சைக்கோட்டை மைதானத்தில் சசிவர்ணர் வேங்கையை அடக்கும் வீர விழா நடந்தது. ஆறு நாட்கள் பசியோடிருந்த வேங்கை, அவர்மீது எகிரிப்பாய்ந்தது. கன்னியர் திகைக்க, காவலர் சிரிக்க, என்ன ஆகுமோ என்று சூழ்ந்திருந்தோர் ஏங்கி நிற்க, பசி கொண்ட புலியை மறவர் நாட்டு மனிதப்புலி துண்டு துண்டாக்கிக் கீழே போட்டது. பற்களில் ஒன்றெடுத்துத் துளசி மன்னரிடம் கொடுத்தார் சசிவர்ணர். கூட்டம் கைதட்டி ஆரவாரித்தது. பன்னீராயிரம் துருப்புகளும், செலவுக்குப் பொருளும் கொடுத்து சசிவர்ணரை அனுப்பி வைத்தார் தஞ்சை மன்னர்.

விஜய சேதுபதியும், சசிவர்ணரும் படை பலத்தோடு அறந்தாங்கிக்கோட்டையில் வந்து இறங்கினார்கள். இந்தத் தடவை அவர்கள் தோற்றால், சசிவர்ணருக்கு உடமையான நாலுகோட்டையும் பறி போகும்; பக்கத்து படமாத்தூர் சக்கந்திச் சீமைகளுக்கும் பாதுகாப்பில்லாமல் போய்விடும். 'சரித்திரக் கும்மி' ஆசிரியர் சொல்வதுபோல், 'மராட்டிச்சி மகன்' பவானி சங்ரன் அப்போது பெரும் பலம் உள்ளவனாக இருந்தான். முழவு ஒலித்தது. கோட்டையின் உச்சியில் ஏறி நின்று பார்த்தான் பவானி சங்கரன். தஞ்சைப் படையோடு, விஜயசேதுபதியும் சசிவர்ணரும் வந்திருப்பதை அறிந்தான். உடனே ஓடிப்போய்க் காட்டில் ஒழிந்துகொண்டான், என 'சரித்திரக் கும்மி' ஆசிரியர் தெரிவிக்கிறார். ஆனால், இந்தப் போரில் பவானிசங்கரன் கைது செய்யப்பட்டு, தஞ்சைக்குக் கொண்டு செல்லப்பட்டான் எனவும், தஞ்சை அரசனால் கடுமையாக நடத்தப்பட்டுக் கொல்லப்பட்டான், எனவும் ஒரு வரலாற்றாசிரியர் தெரிவிக்கிறார்.

உண்மை எதுவாயினும், சசிவர்ணத்தேவரும், விஜயசேதுபதியும் சேதுநாட்டை மீண்டும் வெற்றிகொண்டது தெளிவாகப் புலனாகிறது. இந்த வெ[illegible]சம் பொன் வருமானமுள்ள இராமநாதபுரம் சீமை, ஐந்து பங்காகப் பிரிக்கப்பட்டு, ஆறு இலட்சம் பொன் வருமானமுள்ள இரண்டு பங்கு சிவகெங்கைச் சீமையாகவும், ஒன்பது இலட்சம் பொன் வருமானம் உள்ளது இராமநாதபுரம் சீமையாகவும் ஆக்கப்பட்டன. இப்படி ஆக்கியவர் விஜயசேதுபதியா, அவரது தாய்மாமனான கட்டையத்தேவரா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது.

எது எப்படியாயினும் மறவர் நாடு ஐந்து பங்காகப் பிரிக்கப்பட்டதும், அதில் இரண்டு பங்கு சிவகெங்கைச் சீமை என்பதும், அதன் முதல் மன்னராக அமர்த்தப்பட்டவர் சசிவர்ணத்தேவர் என்பதும், அவரது மனைவி அகிலாண்டஈஸ்வரி நாச்சியார் பட்டத்துராணியாக ஆனதும் தெளிவாகின்றன.

இந்த சிவகெங்கைச் சீமை இரண்டாயிரம் சதுர மைல் நிலப்பரப்புள்ளது. 1730-ல், சசிவர்ணத்தேவரின் தலைமையின் கீழ் இதன் வரலாறு துவங்குகிறது.

தொடரும்

அடுத்த இதழில்

"தேவர் மகன் தேவரும், செல்லாக் காசு நவாபும்"

அடுத்த இதழில்...

செங்கோலுக் கேனோ சினம்?

கண்ணதாசன் எழுதுகிறார்.

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

கிடைக்காததால் புரட்சி ராணுவம் சிதறுண்டது. மக்கள் நகரங்களில் இருந்து வெளியேறி காடுகளில் குடியேறி மரங்களில் பறவைகளைப் போல் வாழலானார்கள்.

புரட்சிப்படை சிதறுண்டு போனதைப் பயன்படுத்தி ரஷ்ய ராணுவம் பல கொடுமைகள் புரிய ஆரம்பித்தன. ஆண்களையும் பெண்களையும் அவரவர்கள் குடிசையிலேயே தூக்கிலிட்டு வீட்டையே கொளுத்தி அந்தத் தீயின் ஜுவாலையிலே குளிர் காய்ந்தார்கள் ரஷ்யர்கள்! ஒன்றுமறியா பச்சிளங் குழந்தைகளை மிருகங்கள் நிறைந்த காடுகளில் கொண்டு விட்டனர்.

இத்தகையக் கொடுமைகளுக்குப் பிறகும் ரஷ்ய எதிர்ப்புணர்ச்சி மக்களிடம் மங்கிவிடவில்லை. 1863 மார்ச்சில் ஜெனரல் மரியன் லாங்கிவிச் என்பவனைத் தலைவனாகக் கொண்டு 3000 பேர்கள் கொண்ட ஒரு ராணுவம் உருவாக்கப்பட்டது. மார்ச் மத்தியில் இச்சிறு படை போர் தொடுத்தது. 3 நாட்கள் போர் நடைபெற்றது. புரட்சிப் படைக்கு உணவு கிடைக்காததால் இச்சிறு படை பலகீனமடைந்தது. 1863 மார்ச் 17-ம்தேதியன்று ஜெனரல் மரியன்லாங்கிவிச் ஆஸ் கோவ் எல்லையைக் கடந்து கிரா[illegible] செல்லும் வழியில் ரஷ்ய ராணுவத்தால் பிடிபட்டான். அன்றே அத்தலைவனை பொது இடத்தில் தூக்கிலிட்டனர். அத்துடன் அப்புரட்சியும் ஒழிந்தது.

பலமுறை போர் தொடுத்தும்—ரஷ்யாவின் ராணுவத்தை முறியடிக்க முடியவில்லை என்பதை உணர்ந்து சக்தி வாய்ந்த ரஷ்ய ராணுவத்தை முறியடிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு என்பதை புரட்சித் தலைவர்கள் உணர்ந்தார்கள். சக்தி வாய்ந்த ரஷ்ய ராணுவத்தை போதிய ஆயுதங்கள் இல்லாமல் முறியடிக்க முடியாது என்பதால் வெளிநாட்டு உதவியை நாடுவது என்ற முடிவுக்கு வந்தனர். தங்களுக்கு ஆயுதங்களும் பண உதவியும் அளிக்குமாறு பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் புரட்சியாளர்கள் தூது அனுப்பினார்கள்.

அப்போது பிரிட்டனில் பிரதம மந்திரியாக இருந்த பால்மர்சன் ரஷ்யா, போலந்தில் நடத்தும் கொடுமைகளைக் கண்டித்து, போலந்திலிருந்து ரஷ்யா வெளியேற வேண்டும் என்று நிக்கோலஸ் மன்னனுக்கு மூன்று குறிப்புகள் அனுப்பினார். ஆனால் நிக்கோலஸ் பிரிட்டனின் குறிப்பை நிராகரித்தான். பிரிட்டனிடம் இருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லையென்றாலும், போலந்து மக்கள் பிரான்ஸ் மன்னனை மூன்றாம் நெப்போலியன் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அவனும் இவர்களை விட்டுவிட்டான்.

தோல்விகளை அடுக்கடுக்காக அணைத்துக்கொண்ட போதிலும் புரட்சி ராணுவம் கடைசி மூச்சு இருக்கும்வரை போரிட்டார்கள். இச்சமயம் தங்கள் ராணுவத் தலைவன் மியேரோஸ்ஷியை நீக்கிவிட்டு 37 வயதான ஜெனரல் ரோமால்டுட்ராகட் என்பவனை ராணுவத் தலைவனாக நியமித்தார்கள். இவன்தான் புரட்சி ராணுவத்தின் கடைசித் தலைவன்.

லிதுவேனியாவில் புரட்சியை அடக்க நிக்கோலஸ் மன்னன் தன் ராணுவத்திலேயே மிகக் கொடூரமான ராணுவத் தலைவன் ஜெனரல் முரேவி என்பவனை லிதுவேனியாவுக்கு அனுப்பினான். ஒரு மாதத்திற்குள் லிதுவேனியாவில் 228 புரட்சியாளர்களைப் பகிரங்கமாக தூக்கிலிட்டான். 9400 பேர்களை சைபீரியாவுக்கு நாடு கடத்தினான். கிராமங்களில் வீடுகளுக்கு தீ வைத்துப் பொசுக்கி அப்பாவி மக்களைக் கொன்றான். அமைதி நிலவியது.

ஜெனரல் முரேவி லிதுவேனியாவில் கடைட்பிடித்தப் முறை வெற்றியளிக்கவே வார்சாவிலும் அத்தகைய முறையைக் கையாள நிக்கோலஸ் மன்னன் நினைத்து, போலந்து பார்லிமெண்ட் தலைவனை வீலோபோல்ஷியை நீக்கிவிட்டு ஜெனரல் தியேடர்பெர்க் என்பவனைத் தலைவனாக நியமித்தான். போலந்தின் வரலாற்றிலேயே இவன் காலத்தில்தான் பயங்கர அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டது. மூன்று வாரம் வார்சா நகரம் பற்றி எரிந்தது. கடைசியாக 1863 செப்டம்பர் 19-ம்தேதி புரட்சியாளர்கள் தியேடர்பெர்க் மீது கை வெடிகுண்டு வீசிக் கொன்றார்கள்.

நாளுக்கு நாள் ரஷ்ய ராணுவம் சிறுகச் சிறுக போலந்து மக்களைக் கொன்று குவித்துக்கொண்டிருந்தது. புரட்சிக்காரர்களை வீடுகளில் ஒளித்து வைத்திருந்த குற்றத்திற்காக நூற்றுக்கணக்கான தாய்மார்களை பகிரங்கமாக தூக்கிலிட்டனர். சக்தி வாய்ந்த ரஷ்ய ராணுவத்தை எதிர்க்கமுடியாமல் போலந்து புரட்சி ராணுவம் சிதறுண்டது. 1864 ஆகஸ்ட் 22-ம்தேதி புரட்சி ராணுவத்தின் கடைசித் தலைவனை ரோமால்டுட்ராகட் ரஷ்ய ராணுவத்தால் பிடிக்கப்பட்டு அவரையும் அவர் சகாக்கள் 4 பேர்களையும் போலந்து சிகிஸ்மண்டு சதுக்கத்தில் பகிரங்கமாகத் தூக்கிலிட்டனர்—ஆகஸ்டிலேயே போலந்து சப் புரட்சியும் அடக்கப்பட்டது. ஆனாலும் போலந்து மக்களின் புரட்சியை நசுக்க சுமார் 20,000 புரட்சியாளர்களைக் கொன்றுகுவிக்க வேண்டியதாயிற்று. சுமார் 18000 பேர்களை நாடு கடத்த வேண்டியதா[illegible] போலந்து பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. போலந்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் இருந்த பல பொருள்களையும் போலந்து புத்தக சாலைகளிலும், கண்காட்சிசாலைகளிலுமுள்ள விலை மதிக்கமுடியாத பல பொருள்களையும் சூரையாடி ரஷ்யாவுக்குக் கொண்டு சென்றனர்.

போலந்து சர்க்காரில் வேலை செய்துகொண்டிருந்தசுமார்25000 ஊழியர்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ரஷ்யர்களை அமர்த்தி சர்க்கார் காரியாலயங்களை தன் வசப் படுத்திக்கொண்டனர்.

அன்றிலிருந்து இன்றுவரை போலந்து ரஷ்யாவின் காலனி நாடாகவே இருந்து வருகிறது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீறு கொண்டெழுந்து பல வர்லாறுகளிலே போலந்து ஒரு சோக வரலாறாகும். ஆனாலும் ரஷ்ய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போலந்து மக்களின் இடைவிடா போராட்ட தேசிய உணர்ச்சி இன்றளவும் மங்கிவிடவில்லை என்பதற்கு அண்மையில், 1956ல் போலந்தில் நடைபெற்ற புரட்சியே சான்றாகும். அப்புரட்சியும் போலந்துமக்களுக்கு ஒரு தோல்வி என்றாலும், தோல்வியிலும் ஒரு வெற்றி கண்டார்கள். போலந்து மக்களின் கோரிக்கைகளுக்கு ரஷ்யா பணிந்தது! ஆனால் போலந்து ஒரு எரிமலை! என்றைக்காவது ஒரு நாள் எரிமலை வெடிக்காமல் போகாது.

— நாகை வில்சன்

தற்பொழுது கூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெரும் கல்வி அரங்கம்

KNOWLEDGE IS POWER

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து **17-10-58-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **21-10-58-ந் தேதி** முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப் பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். (3) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

கிழவியும் குமரியும்

தோற்றம்

காலஞ் சென்ற தமிழ்ப் பேராசிரியர் கா. நமசிவாய முதலியாரின் கனவு பலித்தது; அருந்தமிழொடு ஆங்கிலம் வல்ல பேராசிரியர் ச. த. சற்குணரின் ஆவல் நிறைவேறியது; காலமெல்லாம் நாட்டுக்கு உழைத்து நலிந்து மெலிந்து மறைந்த பச்சையப்பன் பள்ளி பண்டித திருஞானசம்பந்தரின் தொண்டு பலன் பெற்றது. ஆம். 1933-ல் மேற்கண்ட நல்லறிஞர்களுடன் வேறு சில தமிழ்ச் சான்றோர் சென்னையில் கண்ட "பண்டித சங்கம்", 1940-ல் "தமிழ் வித்துவான் சங்க"மாக உருப் பெற்று வளரத் தொடங்கியது.

மாநிலக் கழகம்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் நல்வாழ்த்துப் பெற்றுத் தழைத்தது.

இன்றைய பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் புலவர் அன்பு கணபதி, சர் தியாகராயர் கல்லூரிப் பேராசிரியர் ம. இராசமாணிக்கம் எம். ஏ., முருக-இலக்குவனார் போன்ற தமிழாசிரிய இளைஞர்களின் உழைப்பைப் பெற்று உயர்ந்து நடைபோட்டது. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், புலவர் மயிலை. சிவமுத்து, பண்டித எஸ். எஸ். அருணகிரிநாதர் போன்றாரின் நல்லாதரவு பெற்று நடந்தது.

தமிழ் முதன்மொழி

1947 மார்ச் 1, 2-ல் டாக்டர் மு. வ. அவர்களின் வரவேற்புத் தலைமையிலும், சொல்லின் செல்வர் இன்றைய டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் சீரிய தலைமையிலும் நடைபெற்ற மாகாணத் தமிழாசிரியர் மாநாட்டில் தமிழ்நாடெங்கணுமுள்ள தமிழாசிரிய உலகமே சென்னை மேரி மண்டபத்தில் வந்து திரண்டது. அன்றைய கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கனார் அம்மாநாட்டைத் திறந்து வைத்தார். அதுவரை ஆதரிப்பாரற்றிருந்த தமிழுக்கும் தமிழாசிரியருக்கும் நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை அன்று பிறந்தது. அம்மாநாட்டில் அரசாங்கக் கல்லூரிகளில் தமிழுக்குப் பேராசிரியர் பதவி ஏற்படுத்தியுள்ளது அரசாங்கம் என அறிவித்தார் அமைச்சர் அவிநாசிலிங்கம்.

அவிநாசிக்குப் பாராட்டு

மேலும், பதினைந்தாண்டு அனுபவம் பெற்ற உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் எல்லாத் தமிழாசிரியர்கட்கு எல். டி. தகுதியும் ஊதியமும் உண்டு என அறிவிக்கப்பட்டது. தமிழாசிரிய உலகில் தகுதிபற்றிச் சீர்திருத்தம் செய்ய வேண்டிய நிலைகள் பல இன்னும் இருந்தாலும், இந்த நிலையினை உண்டாக்கிய— [illegible] துணிவுடன் கட்டளை பிறப்பித்த அந்தத் தகவுடைய சான்றோரைத் தமிழுலகம் மறப்பதற்கில்லை; மாறாகப் போற்றிப் பாராட்டவே செய்கிறது.

டாக்டரின் தலைமை

அம்மாநாட்டில் தமிழ்க்கொடி உயர்த்தி வைத்த பேரறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1956-ல் தஞ்சையில் நடைபெற்ற மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் தலைமை ஏற்றார். அதுமுதல் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களின் சிந்தையும், சொல்லும் செயலும் தமிழ்—தமிழாசிரியர் உயர்வு பற்றியன ஆகவே உள்ளன.



சென்னைத் தமிழாசிரியர் கழகம் சென்ற 14-9-58ல் நடத்திய பாராட்டு விருந்தில் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். எல். சி. அவர்கள்.

தேர்தல் வெற்றி

சென்ற மூன்று திங்களுக்கு முன்னுக நடைபெற்ற சென்னை மேல் சட்டமன்றத் தேர்தலில் ஆசிரியர்களின் பிரதிநிதியாக நின்று சிதம்பரநாதர் வெற்றி பெற்றார். பொதுவாக ஆசிரிய உலகமும் சிறப்பாகத் தமிழாசிரிய உலகமும் கட்டுப்பாடாக நின்று உழைத்துச் சிதம்பரநாதரைச் சட்டமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. சிறப்பாகத் தமிழாசிரியர்கள் தங்களின் பிரதிநிதி ஒருவர், தமிழ்சிறந்த சான்றோர், தங்கள் மாநிலக் கழகத்தின் தலைவர் மேல் மன்றத்தில் வீற்றிருப்பதைப் பெருமையாகவே கொள்ளுகின்றனர்.

சிதம்பரநாதர் தம் பேராசிரியர் பதவியையும் துறந்து, இன்று முழுநேரத் தொண்டராகத் தமிழுலகத்திற்குக் கிடைத்துள்ளார். இது கிடைத்தற்கரிய பேறு. இவ்வாய்ப்பினைத் தமிழ்-தமிழாசிரிய உலகம் நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ளும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

வெள்ளி விழா

மாநிலத் தமிழாசிரியர் கழகம் சென்ற 25 ஆண்டுகளாகச் செய்து வரும் தொண்டு இனி [illegible] கழகம் அண்மையில் தன் "வெள்ளி விழா"வைச் சென்னையில் நடத்த இருக்கின்றது.

தமிழ்த் தொண்டர்கள்

தமிழாசிரியர் உலகமே என்றும் தமிழினப் பற்றுக் கொண்டது; தமிழ் நாகரிகமும் பண்பாடும் தரணி எங்கணும் பரவத் தளராத் தொண்டு பல புரிந்து வருவது; தமிழகத்தின் எதிர்கால ஏற்றத்தில் விழிப்பு மிக உடையது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் பண்டு முதல் இன்று வரை தமிழ் காத்த-காத்து வரும்-காக்க இருக்கும் தகவுடைய தொண்டர்கள் தமிழாசிரியர்களே.

அமைப்பு வளர்க

1957-ல் பதிவு பெற்ற அவர்கள் "மாநிலத் தமிழாசிரியர் கழகம்" சனநாயகப் பண்புடன் காலத்திற்கேற்ப, அனைத்துத் தமிழாசிரியர்களையும் ஒன்று கூட்டி ஒருமித்த கருத்துடன் கலைத்தொண்டு ஆற்றி வருகிறது. இந்த அமைப்பு மேலும் பல்லாற்றான் வளர்ந்து உறுதி பெற்று முன்னெட்டிச் செல்லட்டும்.

கிழவியும் குமரியும்

சில திங்கள்களுக்கு முன்பு தமிழகத்தின் குமரியை ஒட்டிய நாகர்கோயிலில் கூடிய குமரிகள், இத்தமிழாசிரியர்களைக் "கிழவிகள் என்று கேலி பேசினராம். இக்கிழவிகளின் மகள் வயிற்றுக் குழவிகள்தாம் இவர்கள் என்பதை மறந்தனர் போலும். குமரி கிழவியாவது காலம் செய்யும் கோலம். கிழவியின் வளர்ப்பில்-அணைப்பில்-முகிழ்த்தவர்கள் இக்குமரிகள் என்பதை உலகம் அறியும். கிழவியின் பாதுகாப்பு இல்லையேல் குமரியை வல்லூறுகள் கொத்திச் செல்லும் என்பதை இக்குமரிகள் உணரட்டும். அதனோடு இக்குமரிகளும் ஒரு நாள் கிழவிகள் ஆவர் என்பதை மனத்தில் நன்றாக உணரட்டும்.

கன்னித் தமிழ்

முடிவாக இன்னொன்றை எழுத்து உலகம் நன்றாக உளம் கொள்ள வேண்டும்.

ஒரு காலத்து உலகாண்ட நம் தமிழ் அன்னை எல்லோர்க்கும் மூத்தவள்; என்றும் இளையளாய் இருப்பவள்; சீரிளமைத் திறமுடையவள்; அவளைச் செயல் 'மறந்து' அல்ல; நாம் செய்ய வேண்டிய செயல் எவை என நினைந்து, அவற்றை [illegible] தமிழினத்தை, தமிழ்ப் பண்பை உயர்த்துவோமாக!

—தமிழையா.

முகவரி மாற்றம் :

எஸ். எஸ். தென்னரசு,

திருக்கோட்டியூர்

(இராமநாதபுர மாவட்டம்)

"அருணோதயம்" 50-வது புத்தகம் "குடும்ப இலக்கியம்" வெளியீட்டு விழா

21-9-58 அன்று மாலை 4 மணிக்கு "அருணோதயம்" 50-வது புத்தகமான "குடும்ப இலக்கியம்" வெளியீட்டு விழாவை முன்னிட்டு, இராயப்பேட்டை தேவி விலாஸ் ஓட்டலில் தேனீர் விருந்தும், பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு திரு. நாராண துரைக்கண்ணன் அவர்கள் தலைமைவகித்தார். "பழனியப்பா பிரதர்ஸ்" நிருவாகி பழனியப்ப செட்டியார் "குடும்ப இலக்கியம்" புத்தகத்தை வெளியிட்டு வைத்தார். வெளியீட்டின் முதல் புத்தகத்தை "வள்ளுவர் பண்ணை" பழனியப்பன் வாங்கிப் பெருமைப் படுத்தினார்.

கண்ணதாசன், வை. கோ, பேராசிரியர் மி. பொன். இராமநாதன் செட்டியார், அழ. வள்ளியப்பா முதலியோர் "அருணோதய"த்தின் வளர்ச்சி குறித்துப் பாராட்டிப் பேசினர்.

"அருணோதயம்" உரிமையாளர் திரு. அருணன் விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

திறனாய்வுக் கலை

இலக்கியத்தின் அழகையும், குறைபாட்டையும் ஆராய்ந்து முடிவு கட்டுவது—இலக்கியத்தை மதிப்பிடுவது-திறனாய்வு. இந்தப் பணியைச் சீரிய முறையில் ஆற்றுவதற்கு முதிர்ந்த அறிவு வேண்டும்; ஆராயுந்திறன் வேண்டும்; ஆழ்ந்த புலமை வேண்டும்.

அமெரிக்கக் கலைக்களஞ்சியம், இந்தச் சொற்றொடருக்கு ஒரு குறுகிய விளக்கம் தருகிறது— "ஒரு குறிப்பிட்ட நூலின் அழகையும், குறைபாட்டையும் கற்றுணருவது." சற்று விரிவான பொருளில் இச்சொற்றொடர் ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. "அழகுப் படைப்புகளின்-அவைகள் இலக்கியங்களாக இருக்கலாம்; வேறு நுண் கலைகளாகவும் இருக்கலாம்-குணநலன்களையும், தரத்தையும் ஆராய்ந்து கூறுவது"

"திறனாய்வாளன் பிறருடைய இலக்கியங்களில் ஏற்றத் தாழ்வுகள் இவை, இவை, என ஆராய்ந்து முடிவு கட்டுபவன்" என்ற அளவோடு நிறுத்திக் கொண்டார் "ட்ரைடன்" என்ற ஆங்கிலநாட்டு இலக்கியமேதை.

"திறனாய்வின் தந்தை" என அழைக்கப்படும், "அரிஸ்டாட்டில்" இச்சொற்றொடருக்குக் கொண்ட பொருள், நன்றாக ஆராய்ந்து முடிவு கட்டுவது-என்பதாகும். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் 'திறனாய்வு' என்றால் விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல், ஒரு பக்கம் கோடாது, உள்ளது உள்ளபடி காண வேண்டும்.

விருப்பு, வெறுப்பு, இல்லாமல் ஆராய வேண்டுமானால் திறனாய்வாளன் தன் சொந்தக் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, சுவை பயக்காத ஒரு காரியத்தில் இறங்க வேண்டும். மேலும், விருப்பு வெறுப்பற்ற இலக்கிய மேதைகள் சிலர் 'புரட்சிக் கவிஞரின்' கவித்திறனை ஆராய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் எல்லோரும் ஒரே முடிவிற்குத்தான் வர வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. கருத்துக்கள் முரணாக இருப்பதற்கும் இடமுண்டு. காலத்தின் சூழலையும், அறிவின் தரத்தையும் பொறுத்து அவைகள் அமைந்திருக்கும்...

"எ. ரிக்கார்டன்" என்ற மேதை இதே கருத்தை வற்புறுத்திக் கூறுகிறார்:-"ஒரு புலவரது படைப்புகளை ஆராய்ந்து, காரண காரியங்களோடுவிளக்கி விருப்பு வெறுப்பற்ற நிலையிலோ. அல்லது திறனாய்வாளன் சொந்த கருத்துக்களுக்கு ஏற்பவோ மதிப்பிடுவது" ஆனால் "ப்ரௌனல்" என்பார் ஒரு புதிய விளக்கம் தருகிறார்:—"திறனாய்வு என்றால் கவிஞனது திடமான கொள்கைகளை விளக்குவது! கண்டு, கேட்டு, உண்டு, உற்று, உணர முடியாத அழகு நுகர்ச்சிகளுக்கு வடிவம் கொடுப்பது. தன்னுடைய கருத்துக்களோடு, கலைஞனது கொள்கைகளையும் ஒப்பிட்டு, உயர்ந்ததா, தாழ்ந்ததா என்று முடிவு கட்டுவது..."

ராஜபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

கி. மு. 5-ம்நூற்றாண்டிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய இரண்டாயிரத்தி ஐநூறுவருடங்களாகத் திறனாய்வுக் கலைக்குப் புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன—அறிஞர் பெருமக்களால். இருந்தபோதிலும் முடிந்த முடிபாக இலக்கணம் வரைந்து அறுதியிட்டு உரைத்த இலக்கிய மேதைகள் இல்லை என்றே கூறலாம்.

கிரேக்க நாட்டில் கி. மு. 4-ம் நூற்றாண்டில் திறனாய்வுக் கலையின் 'விடிவெள்ளி' "பிளாட்டோ"வின் உருவில் தோன்றியது. அவனது மாணவன் அரிஸ்டாட்டில், மற்றும் அய்சோகிரேட்டசு, தியோபிராட்டசு, லாங்கின்சு போன்றவர்கள் இந்தக் கலையைப் போற்றி வளர்த்தார்கள். "திறனாய்வுக் கலையின்" தாயகம் "கிரேக்கம்" என்றால் அது மிகைபடச் சொன்னக் குற்றத்தின் பாற்படாது,

கோரசு, க்வின்டில்லியன் போன்ற இலத்தீன் மொழிப் புலவர்களின் மடியில் தவழ்ந்து தாந்தே என்ற இத்தாலியப் பெருமகனால் நடை பயின்று-கதே, லெச்சிங்போன்ற ஜெர்மானிய அறிஞர்களிடம் குறுநகை புரிந்து, சிறு கை நீட்டி விளையாடி-ஆங்கில நாட்டிற்கு வரும் பொழுது காலம், பதினேழாம் நூற்றாண்டு, இங்குதான் இந்தக் கலைமடந்தை பூரண பொலிவு பெற்று-அழகுச் சிலையாய்-வாலைப் பருவத்தினளாய் விளங்கியது. சிட்னி, பென் சான்சன், ட்ரைடன், சாமுவல் சான்சன், கோல்ரிட்சு, அர்னால்டு, வால்டர் பேற்றர் போன்றவர்கள் இவள்பால் மையல் கொண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் இவள் பாதங்கள் தமிழகத்து மண்ணை மிதித்தன.

திறனாய்வாளன் சிந்தனை செய்கிறான் தீர்ப்புக் கூறுவதற்காக. பயில்கிறான் புகழ்வதற்காக... திறனாய்வு எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது; எல்லாவற்றிற்கும் தன்னகத்தே ஒரு இடம் கொடுப்பது. எல்லாவற்றையும் நம்புவது; எல்லாவற்றையும் விரும்புவது. உலகைப்போல் விரிந்தது; இயற்கையைப்போல் பொறுமை மிக்கது.

"இலக்கியம் என்றால்என்ன?" "இது நல்ல இலக்கியமா?" இந்த இரண்டு கேள்விக் குறிகளும் திறனாய்வின் முதலும் முடிவுமாக முறையே அமைந்து விளங்குவது. இந்தக் கேள்விக் குறிகளின் கருத்து விளக்கமே திறனாய்வு......மனிதன் பிறக்கிறான்; இறக்கிறான். இந்த இடைக்காலம் முழுவதும் திறனாய்வுதான்.

ஏன்? வாழ்க்கையே ஒருவிதத் திறனாய்வுதானே!...

—சிவம், பி. எஸ்சி.



—2-ம் பக்கத் தொடர்ச்சி—

எல்லைகளை உருவாக்கி முடிவு செய்யலாம்! ஆந்திரம் தனியாகப் பிரிக்கப்பட்டு இத்தனையாண்டுகளுக்குப் பின் இப்போதுதான் படாஸ்கர் தீர்ப்பிற்கு இரண்டு சர்க்கார்களும் இணங்கியிருக்கின்றன. அதுகூடத் தவறு-செய்யப்பட்டுள்ளன டில்லி சர்க்காரால்! ஏனெனில் தமிழகப் பகுதிகள் ஆந்திராவிலே உள்ளன-ஆந்திரப் பகுதிகள் அய்தராபாத்திலும், மைசூரிலும் இணைக்கப்பட்டுள்ளன. ஆந்திர நாட்டின் எல்லைகளைக் காட்டிய பிறகா டில்லி சர்க்கார் பிரிவினையை ஒப்புக்கொண்டது? பொட்டி ராமுலுவின் பிணமல்லவா அவர்களைப் பிரித்துக் கொடுக்கச் செய்தது! மத்திய சர்க்கார் வைத்துள்ள எல்லைக் கமிஷன் வேலை எப்போது முடியப் போகிறது? இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்று பதினோறு ஆண்டுகளாகிவிட்டன! ஆனால் இந்தியாவுக்கும் - சீனவுக்குமிடையிலே எல்லைகள் சரியாக இல்லை. இதனை 17-9-58-'கரண்ட்' இதழில்வெளி வந்துள்ள ஒரு சோகச் செய்தி உறுதிப்படுத்துகிறது! இந்தியாவைச் சேர்ந்த ஆயிரம் சதுர மைல் பரப்பளவுள்ள பகுதிகள் சீனவைச் சேர்ந்தவை என்று சீனவின் நிலநூல் படத்தில் குறிக்கப்பட்டுள்ளதாம்! இதனைக் கண்ணுற்ற நேரு அவர்கள் திடுக்கிட்டாராம்-வியப்புற்றாராம்-விம்மலும் விழியிலே நீரும்கூட வந்திருக்க வேண்டும். 'கரண்ட்'-புதுடில்லி நிருபர் அதனைத் தெரிவிக்க மறந்துவிட்டார்! திராவிட நாட்டிற்கு எல்லைகளைத் தேடியலைகின்ற அகில இந்தியக் கட்சிக்காரர்கள் அத்தனை பேர்களும் இந்தச் செய்திகளை நினைவிலே கொண்டு மேலும் தங்களின் சொல்லுக்கு எல்லை வைக்க வேண்டும்! விடுதலை பெற்ற இந்தியாவின் எல்லைகளைக் காணோம்-விடுதலை பெறப் போகிற திராவிடத்தின் எல்லைகளைக் காணமுடியும்-விழியிலேயுள்ள குறை நீங்கிவிட்டால்! இப்போதைய நான்கு இன மொழி மக்கள் வதிந்து வழங்கும் பகுதிகள் திராவிட நாட்டின் எல்லைகளை உள்ளடக்கியுள்ளன. இவைகள் பிரிவினை அமுலாகிற நேரத்திலே அழிக்கப்பட்டு புதுப்பிக்கப்படலாம் தேவையான வகையில்! கழகத்தின் பாதையிலே தடைகளை நிரப்ப படை திரட்டும் அகில இந்தியக் கூட்டணியினரும் கலாச்சாரக் கழகத்தவரும்-இந்தக் கடைசிக் கேள்வியை இனியேனும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியினருக்கு அடுத்தபடியாகப்போட்டிக் காங்கிரஸ்காரர்-சீர்திருத்தக் கமிட்டியினர் வருகிறார்கள்! இவர்களுடைய முதல்மாநாடு சென்ற ஆண்டு செப்டம்பரில் மதுரையில் நடைபெற்றது. இந்திய தேசிய ஜனநாயகக் காங்கிரஸ் என்று பாதிக் காங்கிரஸ்காரர்களாகப் பெயர் மாற்றம் செய்துகொண்டார்கள்-அகில இந்திய ரீதியிலே வேலை செய்யப் போவதாகத் தெரிவித்தார்கள்! மாநாட்டைத் துவக்கி வைத்தவர் அகில இந்திய 'பார்வர்டு பிளாக்' கட்சியின் துணைத் தலைவர் முத்துராமலிங்கர். அவருடைய கட்சியை விட்டு விலகி காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி மாநாட்டுக்குப் 'பூசை போட்டாரா' என்பதை எவரும் சொல்லவில்லை! அல்லது இவர்கள் அவருடன் கலந்துவிட்டனரா? முன்னேற்றக் கட்சியின் ஒரு சட்ட சபை உறுப்பினர் டி. எல். சசிவர்ணம் என்பவர் ஜனநாயக காங்கிரஸ் மத்தியக் கமிட்டியில் உறுப்பினராக இருக்கிறார்-இவருடைய சொந்தக் கட்சி என்னவாயிற்று? 'காமராஜ் ஒழிப்பும்-தேவர் விடுதலையும் உடனடி வேலைத் திட்டம்' என்று அடிக்கடி பேசிக்கொள்கிறார்கள்! அகில இந்திய முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் என்பவர் சில மாதங்களுக்கு முன்னால் மதுரையில் பேசும்போது-"தேவர் விடுதலைக்காக அகில இந்திய ரீதியில் போராட்டம் நடத்தப்படும்" என்று தெரிவித்தார். தென்னாட்டுத் தலைவர் ஒருவரை வடநாட்டுக் கட்சியினர் விடுவிக்கும் லட்சணம் தென்னாட்டுத் தோழர்களுக்கு இன்னும் புரியவில்லை! ஜனநாயக காங்கிரஸ் அகில இந்திய ரீதியிலே என்றாவது அவர்கள் எதிர்பார்ப்பதுபோல இயங்குமானால் அப்போது உயர்திரு. வெங்கிடகிருட்டிணர் அகில இந்தியத் தலைவராகமுடியுமா? இன்றைய பொதுச் செயலாளர் தோழர் மாரிசாமி அவர்களை வடநாட்டிலே ஏற்றுக்கொள்ள ஆள் உண்டா? திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் அறைகூவலாகக்கூட அந்தத் தலைவர்கள் எடுத்துக்கொண்டு-தங்கள் சீரிய பணியினை மேற்கொள்ள வேண்டும்! கழகத்தவர் திட்டவட்டமாகக் கூறமுடியும் காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவினரை-டி. ஜி. கிருட்டிணமூர்த்திபோன்ற பெரியவர்களை வடநாடு தலைமைக்கு ஏற்காது ஏற்காது! திராவிட நாடு வேண்டாம் என்று சபித்துக்கொள்ளும் இந்த நண்பர்கள்-உண்மையில் மாற்றார்கள், தங்கள் சங்கட நிலைமையை உணரட்டும்!

திராவிடநாட்டுப் பிரிவினை தமிழரசுக் கழகத்தவருக்கு வேண்டாத [illegible] கள் காங்கிரசின் வளர்ப்புப்பிள்ளைகளாக இருந்து மிக அண்மைக் காலத்திலேதான் வெளியே தள்ளப்பட்டவர்கள். இலக்கியப்பிரியர்கள் இலக்கியச் சான்றுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள் கூட்டுவதையே தமிழரசுக் கழகத்தின் வேலைத்திட்டமாக வைத்திருந்தார் அதன் தலைவர்! உறவுக்கு இமயத்தையும் உரிமைக்கு வேங்கடத்தையும் வைத்துக்கொண்டுள்ள தமிழரசுக் கழகத்தவர்-தாங்கள் பாரத புத்திரர்களல்ல இந்தியத் தமிழர்கள் என்றோர் புதிய இனத்தையே சென்ற ஆண்டு - 'செங்கோலில்' உண்டாக்கியிருந்தார்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ள ஆற்றலை இணையற்ற அந்தத் தலைவர் 'மா. பொ. சிவஞானம் பல முறை ஒப்புக்கொண்டுள்ளார் - ஆனாலும் தன்னுடைய கழகத்தைப் பெரிதும் அணைத்தே செல்லவேண்டும் என்ற அன்புரைகளையும் அடிக்கடி வழங்கியுள்ளார்! அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என அறிமுகப்படுத்திக்கொள்ளும் அவர்தான் தேர்தல் நேரங்களிலே யார் யாருக்கோ இரவலாகிவிடுகிறார், எங்காவது ஒரு சந்து முனையிலே நின்றுகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேச வேண்டுமென்றால் அந்தச் 'செந்தமிழ்ச் செல்வருக்கு' தனியாத ஆசையுண்டு! சென்ற கிழமை சங்கரன்கோவில் பொதுக்கூட்டத்தில் பேசும்போது தமிழரசுக்கழகத்து 'அரிஸ்டாடில்' - திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டுவதற்காக தமிழரசுக் கழகம் அரசியல் கட்சியாக மாறப்போகிறது என்று தெரிவித்துள்ளார்! அதனைப் பெரியதோர் அபாய அறிவிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு அவருடைய கழகத்துடன் சமாதானத்துக்குப் பேரம் பேசும் என்றுகூட அவரது அருமன்ன சீடர்கள் கூறியிருக்கலாம்! அதையும் நம் அனுதாபத்துக்குரிய அப்பாவித்தலைவர் நம்பியிருப்பாரானால் வருங்கால சரிதத்தில் அவரைப்போல ஒரு கேலிக்குரிய உதாரணத்தை நம்மால் காணமுடியாது! பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் கட்சியாக மாறப்போகிற ஒரு கழகம் தன் பாதையிலே செல்வதற்குப் பதிலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தன் விழியோட்டுவது விரும்பத்தக்கதல்ல - விவேகமுமல்ல! இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஏனைய அரசியல் கட்சிக்காரர்களைப் போலவும் சற்று அதிகமாகவேகூட பிரிவினையை எதிர்ப்பதையே வேலைத் திட்டமாகத் தங்களின் தமிழ்நாட்டுக் கமிட்டிக்கு கட்டளையிட்டுள்ளார்கள்! தமிழ்நாட்டுத் தலைவர்கள் பாக்குக் கடிக்கிற நேரத்திலும், அகில உலகப் பிரச்னைகளை அலசுகின்ற நேரத்திலும் திராவிட நாட்டுப் பிரிவினையை வன்மையாகக் கண்டிக்கத் தவறுவதில்லை! கம்யூனிஸ்டுகள் பற்றிய செய்திகளை நிறையக் கேட்டிருக்கிறீர்கள்-அவர்களுடைய குட்டுக்கள் உடைபட வேண்டுமானால் தனித்தனி கட்டுரைகள் தான் வசதியாக இருக்கும் - அடுத்த கிழமை விரிவாகச் சந்திப்போம்!

திராவிட நாட்டுப் பிரிவினையில் தென்னாட்டிலேயிருக்கும் சோஷலிஸ்டுக் கட்சிகள் சரியான எதிரிகளாக இருக்கிறார்கள் என்று ஏற்றுக்கொள்ளவே தயக்கமாக இருக்கிறது. எப்படியோ தங்கள் கட்சிகளின் பெயர்களைத் தமிழகத்தின் சில இடங்களிலே உலவவிட்டுள்ளார்கள். அவர்களாலேயே தங்கள் சொந்தக் கட்சிகளை நல்ல முறையில் நிலைநாட்ட இயலவில்லையென்றால் எதிர்ப்புக் காட்டி முன்னேற்றக் கழகத்தின் முயற்சியை பலனற்றதாக்கிவிட அந்தப் பரிதாபத்துக்குரிய தோழர்களிடத்திலே சரியான பக்குவம் இல்லை! செயல் திறம் படைத்த சின்னச்சாமி போன்ற பல தோழர்கள் டாக்டர் ராம்மனோகர் லோகியா போன்றவர்களின் இந்தி மொழி வெறியைக் கண்டித்த காரணத்தினாலேயே-அவர் சம்பத் அவர்களுக்குத் தேர்தல் வேலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு கட்சி நடவடிக்கைகளின்றும் தள்ளி வைக்கப்பட்டுள்ளார்! அவர்கள் கூடாரத்திலே ஏக இந்தியத் தத்துவார்த்தமும்-பாரம்பரியமும் நிலைத்து நிற்க எந்தவித நியாயமுமில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கை வைத்த நாள் முதல் இன்றுவரை ஆதரவைப் பெருக்கிக் கொண்டுள்ளதே தவிர தோல்வியைப் பெறவில்லை! தமிழகம் தவிர்த்த ஏனைய பகுதிகளைப்பற்றித்தான் பல மாற்றார்கள் சந்தேகப்படுகிறார்கள். பொருளாதாரத் துறையில் தேய்ந்து போன நிலையில் உள்ள தென்னாட்டு மாநிலங்களை நீண்ட நெடு நாட்களுக்கு அடக்கி வைக்கும் ஆற்றல் டில்லியிலே பி[illegible] மேறிக்கொள்ளும் ஆதிக்க வெறியர்களுக்கு இருக்கப் போவதில்லை. [illegible] மேலும் விரிவாக்கத் தாமதம் செய்கிறதேதவிர-திராவிடத்தின் எல்லா பகுதிகளிலும் தனி நாடு தேவையென்ற ஆர்வம் வளர்ந்தே வருகிறது! ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால் தென் மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை பொருமைக் குணம் படைத்த அகில இந்தியர்கள்கூட ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை! இந்தியத்துணைக் கண்டத்தில் இழையோடிக்கொண்டிருக்கும் இன உணர்ச்சியைத் தாயகப் பற்றை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இயக்கத்தவருக்கெல்லாம் எதிர்காலம் நல்ல தீர்ப்பு வழங்கக் காத்திருக்கிறது. கழகத்தின் விடுதலைப் பண்ணிலே இதயத்தைப் பறிகொடுத்துவிட்டவர்கள் நிறைய இருக்கிறார்கள் எதிர் முகாமிலே! இன்றில்லாவிட்டால் நாளை-நாளை மறுநாள் - தென்னகத்தின் விடுதலைக்கு இன வழியாக மொழி வழியாக, அரசியல் உணர்ச்சி வழியாக பெரும் பட்டாளம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்று வீர முழக்கம் செய்திடும் காட்சியினை இந்தியத் துணைக் கண்டத்துச் சரித்திர ஏடுகளிலே காணப் போவது உறுதி! சட்டமன்றம் நாடு விடுதலை பெற்றுவிட்டது என்ற நல்ல சேதியினை உலகத்து மக்களுக்கெல்லாம் உரைக்கத் தகும் வகையிலே நம்முடைய பத்தாவது ஆண்டுப் பணி அமைய வேண்டும். "வளமார் எமது திராவிடம் வாழ்க வாழ்கவே" என வாழ்த்திடவும் வேண்டும்! ★

முகவரி:
கூடலரசன்,
3, கமாண்டிங் ஆபீசர் 2-வது தெரு,
மேலமாசி வீதி,
மதுரை.

அடுத்த இதழில்

மதுரை எழுத்தாளர் மன்ற கவியரங்கில் அரங்கேற்றப்பட்ட கவிதைகள் வெளிவரும்!

198387
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

வெண்பாப் போட்டி

27. நாடித் திரியோமே நாம்.

பட்டாலுந் தீயிற் பழுதுண்டோ பொன்னுக்கு;
முட்டாத செந்தமிழ்க்கே முட்டுண்டோ—கெட்டாலும்
வாடாத் தமிழிருக்க வன்னெஞ்ச இந்தியினை
நாடித் திரியோமே நாம்.

—முத்தூரான், பொள்ளச்சி.

ஈரோடும் காஞ்சியுந்தான் ஈந்துவரும் தேனுண்டால்
சீரோடு வாழ்வும் சிறந்தோங்கும்;—தீராத
மூடப் பழக்கங்கள் மூழ்கிப்போம்; ஆண்டவனை
நாடித் திரியோமே நாம்.

—கு. இன்பவல்லி, சுந்தராபுரம்.

அள்ளிச் சுவையளிக்கும் அன்புத் தமிழரசி
உள்ளிருந் தெம்மோ டுறவாட—கள்ளருந்திக்
கூடி விளையாடக் கூப்பிடும் இந்திதனை
நாடித் திரியோமே நாம்.

—வேத. அருளப்பன், காமாட்சிபுரம்.

எங்கள் தமிழிருக்க ஏலோம் பிறமொழியை;
சங்கக் குறளிருக்கச் சாரோமே—அங்கதற்கே
கூடில் மனுநீதி; எஞ்ஞான்றும் புல்லரினை
நாடித் திரியோமே நாம்.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

கூடிக் கெடுப்பாரைக் குற்றமீக்க கொண்டாரைப்
பாடிப் புகழ்வாரைப் பின்வாங்கும்—பேடியரை
ஓடித் திரிந்துழைக்கா துண்பவரைச் சாமளவும்
நாடித் திரியோமே நாம்.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

எல்லோரும் இன்புற்றே ஏற்றமுடன் வாழ்வதற்கு
நல்லோர்தம் ஒத்துழைப்பை நாம்பெறுவோம்—கல்வியில்
பேடித் திருக்கூட்டப் பேச்செதற்கு; பட்டத்தை
நாடித் திரியோமே நாம்.

—ச. கலைவாணி, திருபுவனபாளையம்.

வாடி நொந்திடினும் வான்மழையே பொய்த்திடினும்
நாடி தளர்ந்திடினும் நல்லதனி—நாடொன்றை
நாடிக் கிளர்ந்தெழுவோ மேயன்றிக் காங்கிரசை
நாடித் திரியோமே நாம்.

—பரிதி, சென்னை-5,

தூற்றிடினும் தாக்கிடினும் துன்பச் சிறைக்கோட்டம்
ஏற்றிடினும் கொள்கை எடுத்தவழி—ஆற்றலுடன்
ஓடிப் பணிபுரிவோம் ஊதியத்தைப் பேர்புகழை
நாடித் திரியோமே நாம்.

—ந. ஜாபர், சித்தயன்கோட்டை.

இந்நாட்டு வஞ்சகரை, இன்றமிழைப் பேணுரை,
தன்னலத்தை யேவிரும்பும் புல்லரை—எந்நாளும்
கூடிப் பொருள்பறிக்கும் கூத்தியரை, வாழ்வினிலே
நாடித் திரியோமே நாம்.

—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

கற்ற அறிவும் கனிந்துருகும் காவியமும்
உற்ற வளமும் உயர்வதுவும்—பெற்றிடினும்
கூடிக் கெடுக்கும் கொடுமதியர் கூட்டத்தை
நாடித் திரியோமே நாம்.

—பசுமலை வீர. முருகேசன், மதுரை.

உண்மை மறைப்போரை; ஊரைக் கெடுப்போரை
தன்னலமே தன்பணியாய்த் தாங்கிட்ட—பண்போரை
பாடி அலையோம் பயன் வேண்டி எந்நாளும்
நாடித் திரியோமே நாம்.

—ஆர். எம். அலியார், முதுகுளத்தூர்.

பண்புவழி சென்று பகுத்தறிந்து கூறிடுவோம்;
அன்பையே கொண்டிடுவோம் ஆயுதமாய்;—துன்பமுறச்
சாடுதலும், வஞ்சகமும், சூதும், பொறுமையும்
நாடித் திரியோமே நாம்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

வெண்மை ஒளிநிலவை வீசிவரும் தென்றலினை
வண்ணப் பனிமலரை பண்ணிசையைக்—கண்ணுளர்
நாளும் உடல்தழுவி நல்லின்பம் ஈவாரேல்
நாடித் திரியோமே நாம்.

—எழிலூரான், சுந்தராபுரம்.

கைத்திறத்தால் வண்ணக் கலைமிக்க மென்னுடை
வைத்திருக்கக் கண்டுலகு வாழ்த்தளிக்கும்—கைத்தறியின்
ஆடை கவின்கொண் டிருக்கையிலே ஆலையினை
நாடித் திரியோமே நாம்.

—மு. வரதராசன், துறையூர்.

உண்ண உணவுபொது ஊர்ப்பொதுவாம் ஆடைமனை
பொன்மணிகள் பூமி பொதுவாகும்—என்னுமுறை
கூடிப் பொதுவாட்சி கொள்வமல்லால் வேறுட்சி
நாடித் திரியோமே நாம்.

—மு. பா. வி. தமிழரசு, தென்னிலை.

கொஞ்சிடுவார்; கெஞ்சிடுவார்; கோதையரே 'தஞ்சமென்று
துஞ்சிடுவார் மார்பகத்தில்; சூலானல்—அஞ்சிடுவார்;
வாடி வதங்கவைப்பர்; வண்டன்ன ஆணினத்தை
நாடித் திரியோமே நாம்.

—அருந்ததி, அமிர்தராயன்கோட்டை.

சாண்வயிறு இல்லையெனில் தாண்டோம் பெருங்கடலை;
வீண்வியர்வை சிந்தோம்;பல் வித்தைகளும்—வேண்டோம்;ஓர்
கோடியிடர் கொண்டுழலோம்; குற்றமாற்றேம்; பொன்பொருளும்
நாடித் திரியோமே நாம்.

—அ. வே. காசிநாதன், கார்வழி.

கூடுவோரைச் சாடுவதும் குண்டாந் தடிவீச்சும்
நாடடைந்தால் நாடிடுமோ? நந்தமிழர்—ஆட்சிவரின்
ஆடிடுவோம் அன்புமொழி பேசிடுவோம்; அந்நியரை
நாடித் திரியோமே நாம்.

—தென்றல் ராமலிங்கம் சென்னை-6.

பட்டம் பதவிகளும் பேசும் புகழுரையும்
கட்டுடல் கன்னியுடன் காசனைத்தும்—முட்டின்றி
தேடிவந்து நம்மிடத்தில் சேர்வதல்லால் எந்நாளும்
நாடித் திரியோமே நாம்

—வள்ளிமணாளன், காரமேடு.

பெற்றெடுத்த அன்னையுளம் பேதலிக்க விட்டுவிட்டே
சிற்றம் பலம்நாடிச் சேவிப்பார்—தெற்றெனவே
ஆடி உருக்காட்ட, ஆலயத்தின் கற்சிலையை
நாடித் திரியோமே நாம்.

—கலி-பொன். பாலு கடலூர்-வண்ணரப்பாளையம்.

நாட்டு விடுதலைக்கும் நல்ல மொழியினுக்கும்
வேட்டு விளைத்திடும் வீணரின்—கூட்டத்தைத்
தேடிப் பிடித்துவந்து தீர்க்குமுன் வேறென்று
நாடித் திரியோமே நாம்.

—கா. ஆனந்தன், சென்னை-13.

போராட்டந் தன்னைப் பிழைப்பாய்க் கருதியுயிர்த்
தேரோட்டும் மாஸ்கோத் திருவடிபோல்—நேர்மையின்றி
வாடித் தொழிலாளர் மாயும் புரட்சிகளை
நாடித் திரியோமே நாம்.

—ந. அலி, துறையூர்.

★
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6.